

தமிழரசு
1-6-1992 ரூ.1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது

# மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 9.3.92 முதல் வாரந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை, மாவட்டவாரியாகச் சுழல்முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பலவேறு மாவட்டங்களிலிருந்தும் உடல் ஊனமுற்றோர், வயதான பெரியவர்கள் மற்றும் தாய்மார்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அனாதைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் தங்களது குறைகளான முதியோர் ஓய்வூதியம், குடியிருக்க இடம், வேலைவாய்ப்பு, கடன் உதவி, காவல்துறையின் பாதுகாப்பு, நிலப்பட்டா, குடும்ப அட்டை, பணியிட மாறுதல், பண உதவி மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்களை அளித்து வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களின் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வருகிறார்கள்.

முதல்கட்டமாக 598 மனுதாரர்களின் மனுக்களின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு 190 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையும், 247 மனுதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தக்க போலீஸ் பாதுகாப்பும், 110 மனுதாரர்களின் கோரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டது. 34 நபர்களுக்குக் கடனுதவியும், 5 நபர்களுக்குக் குடியிருக்க இடமும், 4 நபர்களுக்குப் பட்டாவும், 8 நபர்களுக்குக் குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதர மனுக்களின்மீது தகுந்த நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, 1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 29 பேர்களுக்குத் தலா ரூ.15,000-மும், சிறுநீரகச் சிகிச்சைக்காக ஒருவருக்கு ரூ.15,000-மும் நிதி உதவி வழங்கினார்கள்.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட 7 தம்பதியினருக்குத் தலா ரூ.5,000-மும், விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் ஒரு தம்பதியினருக்கு ரூ.5,000 நிதி உதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மகளிர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் இருவருக்குத் தலா ரூ.5,000-மும் வழங்கினார்கள்.

மேலும் 7 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும், சொந்தத் தொழில் தொடங்க 10 பேர்களுக்கு வங்கிக் கடனுதவியும், 11 ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும், ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கினார்கள்.

1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

## இந்த இதழில்...


புதியதோர் உலகம் படைப்போம்!
—புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை (முழு விவரம்) ... 2

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள்
—மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி ... 9

திரைப்பட நகர் — முதல்வர் அடிக்கல் நாட்டினார் ... 11

கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா ... 13

உதகை - உவகைமிகு சிறப்பிடம்!
—மாண்புமிகு முதல்வர் உரை ... 17

உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி ... 22

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்: ... 24

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள் ... 27

குழந்தை நலம் ... 29

உத்தமர் நேரு (கவிதை) ... 33

மரங்கள் நாட்டின் செல்வங்கள் ... 34

சிவகங்கையில் ரூ.2.5 கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு ... 37

வளரும் வேளாண்மை ... 38

பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான காகித அட்டைகள் ... 39

ஒருமைப்பாடு மலர்ந்திட... (கவிதை) ... 41

ஆசிய ஜோதி ... 44



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

வைகாசித் திங்கள் - 19

இதழ்:23

மலர்:22

1-6-1992



- வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி...
- பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து...

# புதியதோர் உலகம்

## புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து விவாதித்து முடிவெடுக்க இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்து 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்திருப்பது, வளமான ஓர் எதிர் காலத்திற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

தேசிய வளர்ச்சி என்னும் அவசரப் பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். சற்றுக் காலதாமதமானாலும் சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வளர்ச்சியின் வரலாற்றில் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் முக்கியமானதொரு கட்டத்தைக் குறிக்கிறது. 8-வது திட்டத்தின் அளவையும் அம்சங்களையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில், உங்களுடன் ஒரு சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதாரச் சிக்கல்கள் என்ற இருட்டுக் குகையின் முடிவில் வெளிச்சத்தை இப்போதுதான் நாம் காணத் தொடங்கியுள்ளோம். கோடிக்கணக்கான மக்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க நாம் உறுதி கொள்ளும் அதே நேரத்தில் இந்தப் பணியில் நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான எதார்த்தங்களையும் நாம்

# படைப்போம்!

''ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்பதற்கு வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்''.

கணக்கிற் கொள்ள வேண்டும். நாம் பேரினப் பொருளியல் கோட்பாட்டின் சிக்கலான பகுதிகளுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால், மாபெரும் மக்கட் தொகையின் இலட்சக்கணக்கான ஏழைகளையும் கொண்டுள்ள நம்மைப் போன்ற ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பொருத்த வரையில் வளர்ச்சித் திட்டம் என்பது நம்முடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த நமது தயாரிப்பாக இருக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் இறுதிச் சோதனையிலும் அது வெற்றிபெற இணக்கமான அணுகுமுறைகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் வேளையில் நமது நாட்டைப் போன்ற ஒரு நாட்டின் பொங்கிப் பெருகிவரும் ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்பதற்கு, வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். ஏழ்மையை அகற்றுவது என்னும் இந்தப் பிரமாண்டமான வேலையே 8-வது திட்டத்தின் மையப் பொருளாக அமைய வேண்டும். இந்த வகையில் இந்தியா மேற்கொள்ளுகின்ற சோதனை, தற்போதுள்ள சூழ்நிலையில் இணையற்றதாக இருக்க வேண்டும்.

விரைந்து மாறிவருகின்ற ஓர் உலகத்தில் நாம் தன்னந்தனியாக இருந்துவிட முடியாது. வளர்ந்த நாடுகளில் கூட மறுபரிசீலனைக்கான அடையாளங்கள் தென்படும் இந்த நேரத்தில் உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணைந்து செல்வது என்பது எளியது அல்ல. பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், குறிப்பாக உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு ஏழை மக்களைப் பாதித்திருக்கிறது. அந்த ஏழைகள் நலம் காக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். எங்களைப் பொருத்த வரையில் ஒரு திறமையான பொது விநியோக முறையை ஏற்படுத்தி அரிசி தானியங்கள் ஆகியவற்றின் விலைகளை எளிய மக்கள்வாங்கக்கூடிய நிலையில் தொடர்ந்து வைத்திருக்கின்றோம்.

மாநில அரசுகள் மக்களோடு அவர்களது அன்றாட வாழ்க்கையில் நெருங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆகவே, உணவுப் பொருள் விலையுயர்விலிருந்து ஏழை மக்களைக் காக்கும் நிதிச் சுமையை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நிதிக் கட்டுப்பாட்டின் தேவை முதலீடு செய்வதற்கான நிதியாதாரங்களைத் திரட்டுதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்ற நேரத்தில் பட்டினியையும் இல்லாமையையும் அகற்றுவதே நமது பொருளாதாரத் திட்டத்தின் முதற் குறிக்கோளாகவும் உடனடிக் குறிக்கோளாகவும் இருக்க வேண்டுமென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உணவுப் பொருட்களின் விலையை ஒரு தலைப் பட்சமாக உயர்த்திவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையும் கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால், மாநிலங்களின் நிதிநிலையையே தடுமாறச் செய்துவிடக் கூடியதாகும்.

வேளாண்மை ஆராய்ச்சிக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம். மேலும், உழவர் பெருமக்களுக்குப் புதிய தொழில் நுட்பம் சென்று சேரும் வகையில் திறன்மிக்க விஞ்ஞானப் பயிற்சியையும் அளித்து வருகிறோம். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் மேலும் நீர்நிலை ஆதாரங்கள் அமைவதற்கில்லை என்பது குறித்தும் நிலத்தடி நீர் வெகு வேகமாகக் குறைந்துவருவது குறித்தும் நாங்கள் பெரிதும் கவலைப்படுகிறோம்.

மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டம் சம்பந்தமான குறிப்புகள் தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற இந்த மோசமான சூழ்நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவிவரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு உபரி நீரையும் வெள்ளப் பெருக்கையும் கொண்டுவர வேண்டும் என்பதில் புதிய பார்வை தேவை என்பதை அடிக்கடி நான் வற்

''8-வது திட்டத்தின் மையக்கருத்து இந்த நூற்றாண்டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும்''.

புறுத்தி வருகிறேன். துணைத் தலைவர் அவர்கள் 8-வது திட்டத்தில் படுகை நீர்ப் பரிவர்த்தனைகளை நிறுவுவதற்கும் குறிப்பாக தீபகற்ப இந்தியாவின் நதிநீர்த் தொகுப்பை அமைப்பதற்கும் என்னிடம் உறுதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தத் திட்டத்திற்காகப் போதுமான ஒதுக்கீடுகள் இருக்குமென நான் நம்புகிறேன். தற்போதுள்ள நீர்ப்பாசன முறையைக் குறிப்பாகக் காவிரி டெல்டாப் பகுதியை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பான உதவியை வழங்க வேண்டியதன் அவசியத்தை நாம் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

8-வது திட்டத்தின் மையம் இந்த நூற்றாண்டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும். விரைந்து முன்னேறுதல், நாட்டை நிர்மாணிக்கும் நற்பணியில் அதிகார வர்க்கத்தின் தடைகளிலிருந்து விடுபட்டு ஈடுகொடுத்தல் ஆகியவற்றில் தனது அடிப்படை நம்பிக்கையை மீண்டும் காணும் இலட்சியப் பயணமே 8-வது திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

குறிப்பீட்டுத் திட்டமானது தனியார் துறை பங்கேற்பு மலரும் வகையில் உதவிகரமாக இருக்க வேண்டும். எங்களது மாநில புதிய தொழிற் கொள்கையில் இதைத் தெளிவாகவே விளக்கியிருக்கின்றோம். தனியார் துறை ஈடுபாட்டுக்கு வசதியளிக்கும் வகையில் முனைப்பான ஓர் அணுகுமுறையோடு விரைந்து தொழில், மயமாக்குவதில் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த முயற்சியில் மத்திய அரசின் முழு ஆதரவு எங்களுக்குத் தேவைப்படுகிறது.

புதிய தொழிற்சாலைகளுக்குக் கடனுதவி அளித்தல் குறித்து நிதிநிறுவனங்களுக்கிடையே போட்டி மனப்பான்மையை வளர்ப்பதன் அவசியத்தை நிதிநிலைக் குழு தெளிவாக வற்புறுத்தியுள்ளது. இந்த யோசனை வரவேற்கத் தக்கது. ஒழுங்கு முறை இல்லாத சூழ்நிலையில், முனைப்பான தொழில் வளர்ச்சியின் அதிகாரங்களும் பொறுப்பும் இப்போது முழுவதுமாக இதைப் போன்ற நிறுவனங்களையே சார்ந்திருக்கின்றன. இந்தப் புதிய சூழ்நிலையில் ஒரு நிலையான முறைக்

**''தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல் மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம்''.**

**''சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண்மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும்''.**

கனைத் திட்டமிடுவது அவசியமாகும். நிதி முறைக்கான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பிராந்திய நிலையில் 4 அல்லது 5 தொழில் வளர்ச்சி வங்கிகளை நிறுவ யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வங்கிகளின் குழுவில் மாநில அரசின் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்வது மேலும் பொருத்தமானதாகும். அவர்களின் செயல்முறையில் இது தெளிவை உறுதிப்படுத்தும். சென்னை ஒரு பெரிய நிதி சேவை மையமாக இருப்பதால், தென்மண்டலத் தொழில் வங்கியின் தலைமையகமாக இருக்கலாம். வேலை வாய்ப்பில் தன்னிறைவை அடைய வேண்டும் என்னும் எங்களது முயற்சியில் நாங்கள் சிறு தொழில்களுக்கும் வர்த்தகத்திற்கும் குறிப்பாக பண்ணைகள் இல்லாத கிராமப்புறங்களுக்குச் சிறப்பிடம் அளிக்க வேண்டியுள்ளது. நிதித் துறையின் சீர்திருத்தங்கள் முன்னுரிமைத் துறைக்குக் கடனுதவி அளிப்பதில் எந்த ஒரு விரோத மனப்பான்மைக்கு வழி வகுக்கக்கூடாது. மாநிலத்தில், பொருள் உற்பத்தித் துறையின் மாற்றங்கள் குறித்ததான பகுப்பு இத் துறையின் இன்றியமையாத முக்கியத்துவத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. நிதி நிறுவனங்களுக்கு உதவுவதில் கருத்து வேறுபாடு இல்லாத நிலையில், அதிக அளவில் வேலை வாய்ப்பு உற்பத்தித் திறனை ஏற்படுத்தக்கூடிய முன்னுரிமை பெறத்தக்க துறைகளுக்குத் தேவையான கடனுதவி அளிப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் எந்த ஒரு மத்திய முதலீடும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்ததில்லை என்பதைக் குறிப்பிட்டேன். 8-வது திட்டத்தில் மத்திய பொதுத்துறைத் திட்டங்களில் தமிழ்நாட்டிற்கான பங்கு குறித்து நான் அதிருப்தி தெரிவித்தேன். எனது வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். சென்னையில் பொதுத்துறை சார்பில் நிறுவப்படவிருக்கும் ஏரோமேடிக்ஸ் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தமைக்காக பிரதமர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மகிழ்ச்சிகரமான தொடக்கத்தோடு பழைய நிலைமாறும் என்றும், 8-வது திட்டத்தில் தமிழ்நாட்டில் மத்திய முதலீடு அதிகரிக்கப்பட

**"கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம்".**

வேண்டும் என்னும் எங்களது தொடர்ந்த வேண்டுகோளுக்கு மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்திப் பரிசீலிக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

எரிசக்தித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு உயர்ந்தபட்ச முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். குறிப்பாக, நெய்வேலியில் 3-வது லிக்னைட் சுரங்கம் வெட்டுவது குறித்து குறிப்பிட விரும்புகிறேன். திட்டக் குழுவில் குறிப்புகளில் இது காணப்படவில்லை. 8-வது திட்டத்தில் இதனை விரைந்து தொடங்குவது அவசியமாகும்.

அதுபோலவே தமிழ்நாட்டுக்கு எரிவாயு கொணரும் சதர்ன் கேஸ் கிரிட் பற்றிய எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. காவிரிப் படுகையில் PY-3, PY-1 ஆகிய இரண்டையும் பயன்படுத்தவும் அதனுடைய தொடர்போடு எரிவாயுவைக் கொண்டு செயற்படும் 300 மெகாவாட் மின் திட்டத்தைப் பொதுத்துறை அல்லது கூட்டுத்துறை மூலம் மேற்கொள்ள விரும்புகிறோம்.

என்னுடைய இந்த ஆலோசனை கருத்திற் கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன். விரைவில் நிறைவடைய இருக்கின்ற புதிய அனல் மின் திட்டங்களுக்குத் தேவையான நிலக்கரி கொண்டு வருவதற்காகச் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைக்கப்படும் துணைத் துறைமுகத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் அளிக்கப்பட்டு இந்த அதிமுக்கியமான திட்டத்துக்குரிய பணிகள் தொடங்கப்படுமென்று நான் நம்புகிறேன்.

8-வது திட்டத்தில் மின்னாற்றலுக்கான திட்டமிடுதல், வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபட தனியார் துறை அழைக்கப்பட வேண்டும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், எல்லா மட்டங்களிலும் விரைந்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல்மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்த மாபெரும் திட்டம் மொத்தம் 7 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் கூட்டுத் துறை மூலம் அமைக்கப்பட இருக்கிறது. இதற்காக ஒரு புதிய கம்பெனியை நிறுவி செயல் சாத்தியக் கூறுகளைப் பற்றிய அறிக்கையை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டத்திற்கான இசைவு விரைவில் அளிக்கப்படுமென்று நான் நம்புகிறேன்.

தனியார் துறையில் தூத்துக்குடியில் ஒன்றும் கடலூரில் ஒன்றுமாக ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன்கொண்ட, நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல்மின் திட்டங்களை உருவாக்க நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். இந்த மின் நிலையங்களை இயக்கத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி விரைவில் கிடைக்குமென்று நான் நம்புகிறேன். சோவியத் யூனியன் துண்டு துண்டுகளாக்கப்பட்ட பின்னணியில் கூடங்குளம் அணு ஆற்றல் திட்டம் பற்றிய கருத்துக்கள் மறுபடி வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நம் நாடு மிகப் பெரியது. இது ஒரு மாபெரும் சந்தை. இந்தச் சந்தையை நிலையாக வைத்திருக்கக் கூடிய சில கோட்பாடுகள் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குத் தீங்கு பயக்கும் வகையில் மாறுதல்கள் அடைந்துள்ளன. எஃகு, நிலக்கரி போன்ற முக்கியமான பொருள்களுக்கு விலை குறிக்கும் விஷயத்தில் தெள்ளத் தெளிவாக ஒரு பாதகமான சூழ்நிலைக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. சரக்குக் கட்டணம் சமன் செய்யப்பட வேண்டுமென்ற எங்கள் வேண்டுகோளுக்கு எந்த மறுமொழியுமில்லை. குறைந்தபட்சம் தொலைதூர மாநிலங்களிலிருந்து இந்த விலை உயர்வான பொருள்களைப் பெறக்கூடிய கடுமையான நிலையிலிருந்து நாங்கள் விடுவிக்கப்படலாம். குறிப்பாக நிலக்கரி கொண்டு வருவதில் நாங்கள் அடையும் இன்னல்களை நான் குறிப்பிடுகிறேன்.

நிலக்கரி போன்ற மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முழுமையான வசதி மேலும் வளர வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் போன்ற ஒரு மாநிலம் வெளிச்சந்தையிலிருந்து அடிப்படை மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு ஏன்

**"எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலை வாய்ப்பு, சிறந்த விநியோக்க் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும்".**

அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு எந்த ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில் வெளிப் புறச் சார்பான பொருளாதாரத்தை வளர்ப்பதற் கான வழிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தேன். இதைச் சாத்தியமாக்கும் இரண்டு சாதனங்களை யும் கூடத் தெரிவித்திருந்தேன். நான் குறிப் பிடுபவை வரியில்லாத் துறைமுகமும் சிங்கப் பூருடன் வணிகச் சந்தையும் ஆகும். வரியில்லா ஒரு துறைமுகத்தை அறிவித்திருப்பது தமிழகத்தில் வரியில்லா இன்னொரு துறைமுகத்தை விரைவில் அமைப்பதற்குத் தடையாக இருக்காது என்று நம்புகிறேன். இந்த இரண்டு கருத்துக்களுக்கும் விரைவில் செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் ஆர்வமாக இருக்கின்றேன். அதன் மூலம் 8-வது திட்டத்தில் நல்லதொரு வளர்ச்சி நாம் எட்டுவது உறுதி செய்யப்படும்.

சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண் மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும். குறிப் பாக எங்கள் மாநிலத்திலுள்ள சாலைகளின் நிலையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலை அமைப்பது பற்றியும், சில தேசிய நெடுஞ்சாலை களில் 4 வழிப்பாதைகள் அமைப்பதற்கும் மாநில நெடுஞ்சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றம் செய்வதற்கும் நாங்கள் விண்ணப்பம் செய்திருந்தோம். இந்தத் திட்டங்களுக்கான விரை வான அனுமதியை எதிர்பார்க்கின்றோம். மத்திய சாலை நிதியிலிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலாகத் தொகை ஒதுக்குவது குறித்து விரைவான முடி வெடுக்குமாறும் நான் வேண்டிக் கொள்கிறேன். நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருந் தாலும் இந்த நிதிக்கு அளிக்கப்படும் கூடுதல் தொகைகள் மாநிலங்களுக்குக் கிடைக்க இன்னும் வழிவகை செய்யப்படவில்லை. சாலை மேம் பாட்டுக்காக நிதியளிப்பதற்குச் சுங்கம் வசூலிக்கும் ஒரு திட்டத்திற்கு நாங்கள் இறுதி வடிவம் தந்திருக் கின்றோம். சாலைகளைச் சரியாகப் பேணுவதற்கு நாங்கள் உயர்ந்த பட்ச முன்னுரிமை வழங்கி யிருக்கின்றோம்.

8-வது திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு நாங்கள் மிகுந்த முன்னுரிமை அளித்திருக்கின்றோம். ஒவ்வொரு குடியிருப்புக் கும் குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரத்தையாவது வழங்குகின்ற சோதனையில் நாங்கள் வெற்றி கண்டிருந்தாலும் கோடை காலத்தில் முற்றிலும் சிரமத்திற்கு உள்ளாகின்ற எண்ணற்ற குடியிருப்பு களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற பிரமாண்டமான பணியை நாங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு நாங்கள் வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படவிருக் கும் ரூ.528.50 கோடி திட்டம் ஒன்றை வகுத் துள்ளோம். இந்தத் திட்டத்திற்குக் கூடிய விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் நீண்டகாலமாக நிலவிவரும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை நன்றாகத் தெரிந் ததே. நான் ஆந்திர முதல்வருடன் பயனளிக்கக் கூடிய ஆலோசனைகளை நடத்தினேன். அதன் விளைவாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னைக்கு, கிருஷ்ணா நதிநீர் கிடைக்க உறுதி செய்யும் வகையில் நாங்கள் புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது. அதே காலக்கட்டத் தில் ரூ.1,180.20 கோடி முதலீட்டில் கிருஷ்ணா நீரைச் சுத்தப்படுத்தி வழங்குவதற்கான மிகப்பெரிய திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டம் உலக வங்கியின் ஒப்புதலுக்குக் காத் திருக்கிறது.

உண்மையில் நான்கு பெருநகர்களிலும் பிரச்சினைகள் பயமுறுத்திக்கொண்டு இருக் கின்றன. 8-வது திட்டத்தில் இந்த நான்கு பெரு நகர்களிலும் நிலவும் மோசமான நிலைமையைச் சமாளிக்க ஒரு திட்டவட்டமான முயற்சி மேற்



கொள்ளப்பட வேண்டியது அவசியம். சென்னையை எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக சென்னை 2000 என்னும் ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதற்குத் தேவைப்படும் செலவினமோ பெரிய அளவிலிருக்கிறது. இந்தச் சிறப்பான நிதி ஆதாரங்களைத் தேடுவது மாநிலத்துக்கு இயலாத காரியம்.


1989-90-வது ஆண்டுக்கான 9-வது நிதித் திட்டத்தில் சென்னை எந்த ஒரு உதவி அடிப்படையிலான பரிந்துரைகளிலும் இடம் பெறவில்லை. இந்த நான்கு பெருநகரங்களிலும் உள்ள நகர்ப்புற ஏழை மக்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் புதிய திட்டமொன்றை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏழைகளின் பாதுகாப்பான ஏற்பாட்டிற்கு முக்கிய இடத்தை அளித்திருக்கின்றோம். அதே நேரத்தில் மனித வளத்தை மேம்படுத்துவதற்கே திட்டத்தில் முதலிடம் தந்திருக்கின்றோம். கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம். ஓர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்காக வெளிநாட்டு உதவியை வேண்டியிருக்கிறோம். பெண் குழந்தைக் கல்வி, கல்வியின் தர மேம்பாடு, ஆகியவற்றுக்கு இத்திட்டம் மிகவும் முக்கியமளிக்கின்றது. விரைவில் இதற்கான இசைவை எதிர்பார்க்கின்றோம். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெற்றுள்ள வெற்றி, பரிசு பெறுவதற்குப் பதிலாக நிதி ஆதாரங்கள் மறுக்கப்படுவதற்கே வழிகோலியிருக்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்குத் தேவையான அரசியல் அர்ப்பணிப்பைப் பெறுவதற்கு ஆற்றல் மிக்க ஓர் ஊக்குவிப்பை எதிர்பார்க்கிறோம். தேசிய சராசரிக்குக் கீழாகத் தனி நபர் வருமானங்கொண்ட மாநிலங்களுக்கு காட்கில் பரிந்துரைபடி நிதி ஒதுக்கீடு செய்யும் போது வருமானக் கணக்கீடு, 1971-ஆம் ஆண்டு மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி அமைய வேண்டும் என்னும் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் தொகை அடிப்படையில் 60 சதவீதப் பங்கைப் பிரித்தளிக்கும் நடைமுறைக்கு இயைபுடையதாக இது இருக்கும். மக்கள் தொகைக் குறைப்பில் மிகச் சிறப்பான பணியாற்றியிருக்கும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து விடக்கூடாது என்று கவனமூட்ட விரும்புகிறேன். அவ்வாறு குறைத்து விடுவது முறையற்றதாகும்.

எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலைவாய்ப்பு, சிறந்த விநியோகக் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும். ஜவஹர், ரோஜ்ஹார் யோஜனா திட்டத்துக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டிருப்பது குறித்து என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற ஏழை மக்களின் கைகளில் ஊதியத்தை நேரடியாக அளிக்கும் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடுகள் உண்மையிலே தொடர்ந்து காக்கப்பட வேண்டியவை. கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் கூட ஏழைக்குத் தினசரி உணவை மறுத்துவிடக்கூடாது. விநியோக முறைகளின் நிர்வாகத்தில் புதுமை காணல், உடல்நலம் பேணல், சத்துணவு வழங்குதல், நேரடி ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கு நாம் சிறப்பிடம் தரப்பட வேண்டும். புதிய வழிகளை அறிமுகப்படுத்துதல் அடிப்படை

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் முதலாண்டு நினைவு நாளன்று (21.5.92), தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலக அலுவலர்களும், ஊழியர்களும் ''பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி'' எடுத்துக் கொண்டார்கள்.





''சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது, சிறுசேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும்''.

நிலையை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்காக இந்தத் திட்டங்கள் பற்றிய இன்னும் கூர்ந்த பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

முக்கியமான துறைகளிலும் புதிய துறைகளிலும் தனியார் துறை பெருமளவில் பங்கு பெறுகையில், உண்மையிலேயே நேரடிப் பொறுப்பு தனக்கு ஓரளவு குறையுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கலாம். சமூகப் பணிகளில் பெரும் பங்கு ஆற்றும் பொறுப்புள்ள மாநிலங்களுக்கு நிதிச்சுமை இன்னும் கூடும். எனது பார்வையில் மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்புகள் பங்கீடு செய்யப்படுகின்றனவே ஒழிய அந்த அளவுக்கு நிதி ஆதாரங்களில் பங்கீடு இருப்பதில்லை. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவிகள் மேம்படுத்தப்பட வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த உயர்ந்து வரும் பொறுப்புகளும் வட்டிச் சுமைகளும் அதிகரிக்க அதிகரிக்க மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிகர நிதி மாற்றம் உண்மையில் மிகக் குறைவாகவே உள்ளது. 8-வது திட்டம் கடினமான சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நாம் ஒத்துக் கொண்டிருக்கிற அதே வேளையில், மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியளவு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உண்மையில் ஒவ்வொரு திட்டக் காலத்திலும் இவ்வாறு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். 8-வது திட்டத்திலும் இது இயலும் என்றே நான் நம்புகிறேன்.

1991 டிசம்பரில் தேசிய வளர்ச்சிக் குழுவால் மறுபரிசீலனை செய்யபட்ட காட்கில் திட்டத்தால் மாநிலங்களுக்கான மத்திய உதவி பிரித்தளிக்கப்படுகிறது. தனிநபர் வருமான விவரங்களைச் சரியாகக் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்களை அந்தக் கூட்டத்திலேயே நான் எடுத்துக்காட்டியிருந்தேன். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை தனிநபர் கணக்கீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படலாம் என்னும் என்னுடைய யோசனை இந்த சிக்கலைத் தீர்த்து வைக்கக் கூடும்.

தனிநபர் வருமானம் ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப்படுவதால் இந்த ஆலோசனையைச் சுலபமாக அமல்படுத்தலாம். தமிழ்நாடு சந்திக்கவிருக்கும், பலவேறு சிறப்புப் பிரச்சினைகளுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. நிதி ஒதுக்கீட்டின் பொழுது இது கருத்தில் கொள்ளப்படும் என நான் நம்புகிறேன்.

நம் கடல் எல்லைப் பிரச்சினை அறியப்பட்டது. கடந்த ஆண்டு சிறு உதவியைப் பெற்றுள்ளோம். குறிப்பாக எல்லைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள மாநிலங்களுக்குள்ள மத்திய அரசின் சிறப்பான நிதி ஒதுக்கீடு தொடர வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாநிலத் திட்டங்கள் பெரும் அளவில் வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்ட நிதி ஆதாரங்களையே நம்பி உள்ளது. புதிய திட்டங்கள், மற்ற பிரச்சினைகளைக் குறித்து மத்திய மாநில அரசுகளுக்கிடையே நல்லதொரு பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும். வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்குப் போடப்படும் நிபந்தனைகள் குறித்து நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை. மத்திய நிதி நிலையறிக்கையைச் சரிசெய்யும் குறுகியகாலக் கண்ணோட்டத்தோடு இதை நாம் வழங்கக்கூடாது. மாநிலங்கள் பெரும்பாலும் சமூக நலப் பிரிவில் கடினமான திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். அவர்களைக் கூடுதல் செலவினை ஏற்கச் சொல்வது சரியாகாது. வெளியிலிருந்து பெறப்பட்ட 100 சதவிகித உதவிகள் இன்னும் சில மாநிலங்களிலுள்ள துறைகளுக்குப் போய்ச் சேராமல் உள்ளது. ஏற்கெனவே அளிக்கப்பட்ட உறுதிகளின் அடிப்படைகளில் 100 சதவிகித உதவி எந்தவித விலக்கும் இல்லாமல் மாநிலங்களிலுள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.

சிறுசேமிப்பு, கடன் வசதிகளை வெகுவாகக்

''8-வது திட்டத்தைத் தொடங்குகின்ற இவ்வேளையில், கோடிக் கணக்கான இந்தியர்களுக்குச் சிறப்பான வாழ்க்கையை வழங்குகின்ற நற்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்!''

(42—ஆம் பக்கம் பார்க்க)





# முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள்

## மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், கொடுமையான முறையில் ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு முடிவடைந்து, 21.5.1992 அன்று முதலாம் ஆண்டு நினைவு நாள் நாடெங்கும் அனுசரிக்கப்பட்டது.

அன்னாரது நினைவு நாளை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூரில் அவர் உயிர் நீத்த இடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்தில், மலர் அஞ்சலி செலுத்துவதற்காக மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் டெல்லியிலிருந்து விமானப்படை விமானம் மூலம் 21.5.92 காலை சென்னை வந்தார்.

மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, திரு. வாழப்பாடி கே. ராமமூர்த்தி, மத்திய அமைச்சர்கள் ஆகியோர் ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபெரும்புதூருக்கு அன்று காலை 10 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் இருந்து இறங்கியவுடன், நேராக ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்திற்குச் சென்றனர். அங்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். அவர்களைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு. சங்கரானந்த், திரு. விஜயபாஸ்கர் ரெட்டி, திரு. பொதேதார், திரு. குலாம்நபி ஆசாத், மாண்புமிகு கேரள முதல்வர் திரு. கருணாகரன், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி ஆகியோரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

மலர் அஞ்சலி செலுத்தி முடிந்ததும், மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ராஜீவ் நினைவிடம் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடைக்குச் சென்றனர். மாண்புமிகு பிரதமர் அவர்கள், 'பயங்கரவாத எதிர்ப்பு' உறுதிமொழியை ஆங்கிலத்தில் படித்தார். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் உள்பட அனைவரும் திரும்பச் சொல்லி 'பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி' எடுத்துக் கொண்டனர்.

அந்த உறுதிமொழி வாசகம் வருமாறு:

'அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எல்லா வகையான பயங்கரவாதங்களையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஆபத்து விளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கொள்வோம்.''

பிரபல கர்நாடக இசை மேதை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினார். அதற்குப்பின் 10.40 மணிக்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

முன்னதாக, கோவையிலிருந்து வந்த ராஜீவ் காந்தி ஜோதியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், மறைந்த மாபெரும் தலைவர் ராஜீவ் காந்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**என். இளங்கோ.**

## அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தவிர்க்க மாநகராட்சியின் புதிய நடைமுறை

''திட்ட அனுமதிக்கு மாறாக அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தொடக்க நிலையிலேயே அதாவது அடித்தளம் போடும்போதே தடுத்து நிறுத்துவதற்கு ஒரு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

''இதன்படி கோட்ட இளம் பொறியாளர், உதவிப் பொறியாளர் தங்கள் பகுதிகளில் திட்ட அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் அடித்தளம் போடும்போதே பரிசோதனை செய்யப்பட்டு அவை யாவும் அனுமதித்த திட்டப்படியே உள்ளன என்று சான்றிதழ் ஒன்றினை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். ஏதாவது மாறுதல் இருக்குமானால், அவர்கள் உடனடி யாக உரிமையாளருக்கு நோட்டீசு அளித்து மேலும் கட்டடம் கட்டுவதைத் தடுத்து நிறுத்தத் தலத்திலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டடம் கட்டி முடியும் வரை பின்னர் ஏதும் மாறுபாடுகள் செய்யாதவாறு கண்காணிக்க வேண்டும்.

''கட்டடம் கட்டப்பிட்ட பிறகு அடித்தள மட்டத்திலேயே வேறுபாடுகளோ அத்துமீறல்களோ கண்டுபிடிக்கப்பட்டால் கோட்ட-இளம் பொறியாளர்கள், உதவிப்பொறியாளர்கள் பொறுப்பாவார்கள். உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். திட்ட அனுமதிக்குப் புறம்பாக அத்துமீறிக் கட்டடம் கட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வருகிறது. எனவே, அனைவரும் கட்டட விதிகளின்படி கட்டடம் கட்டுவதை உறுதி செய்ய மாநகராட்சியோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்'' என்று சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

# திரைப்பட நகர்

## முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை - தரமணியில் இருக்கின்ற தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி வளாகத்தில், 28.5.92 அன்று மிக எளிமையாக நடைபெற்ற 'திரைப்பட நகர் அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டார்.


செய்தி சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., அவர்கள், திட்ட விளக்கத்தோடு கூடிய தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

திட்ட விளக்கம்:

''இந்தத் திரைப்பட நகரின் முதல் கட்டப் பணிகள் 70 இலட்சம் ரூபாய் முதலீட்டில் துவங்கும். படம் பிடிக்கத் தேவையான பள்ளி, கல்லூரி, பாலம், விமான நிலையம், புகைவண்டி நிலையம் குடிசைகள், கோயில் அரண்மனை, மாளிகைகள், நீச்சல் குளம் போன்ற எல்லாம் இங்கேயே உருவாக்கப்படும்; தண்ணீருக்குள் படம் பிடிக்கும் வசதியும் செய்து தரப்படும். ஒலிப்பதிவு, படத்தொகுப்பு, ஒப்பனை நிலையமெல்லாம் இங்கேயே அமையும்.

''இந்நகரில் - படப்பிடிப்பிற்காக வரும் நட்சத்திரங்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் தங்க ஓய்வில்லங்களும் உருவாக்கப்படும்; சுற்றுலாப் பயணிகள் படப்பிடிப்பைக் காணச் செய்து அதன் மூலம் அரசுக்கு ஒரு வருவாயும் ஈட்டப்படும்.''






திரைப்பட நகர் - மாதிரி வடிவம்

**விளக்கேற்றி வைத்தல்:**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - புதிதாக அமையவிருக்கும் 'திரைப்பட நகருக்கு' அடிக்கல் நாட்டி - அதற்கான பெயர்ப் பலகைகளையும் திறந்து வைத்தார். அதன் மாதிரி வடிவமைப்பையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

**பூச்செண்டு:**

திரைப்படக் கல்லூரி மாணவ-மாணவிகள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்ச்செண்டும் - திரைப்படக் கல்லூரி நிர்வாகத்தினர், அலுவலர்கள் சார்பில் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

**பங்கேற்றோர்:**

இந்த இனிய விழாவில் - மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பிதுரை அவர்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர் முதலான உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.

**எளிய விழா:**

மிக எளிய முறையில் நடைபெற்ற இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர் திரு. க. கணேசன் இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார்.

விழா நிறைவுற்றபின் - செய்தியாளர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்த செய்தித்துறை இயக்குநர் அவர்கள், "இந்தத் திரைப்பட நகருக்கு வரும் படத் தயாரிப்பாளர்கள், திரைப்படம் தொடர்பான எந்த ஒரு பணிக்காகவும் வெளியே செல்ல வேண்டிய அவசியமில்லாமல், படத்தயாரிப்புத் தொழில் எல்லாவற்றையும் இங்கேயே செய்து படத்தை முடித்துக்கொண்டு மனநிறைவோடு வெளியே செல்லத்தக்கதாக இந்நகரை ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

**தனி அதிகாரி:**

மேலும் இயக்குநர் அவர்கள் விளக்கமாக அதுபற்றித் தெரிவித்ததாவது:

"இந்தத் திரைப்பட நகரம் 86 ஏக்கர் பரப்பளவில் அமையும். இதன் திட்ட மதிப்பீடு இரண்டு கோடி ரூபாய்க்குள் இருக்கலாம். இந்தியாவில் இது போன்ற திரைப்பட நகரம் இப்போது பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் மட்டுமே உள்ளது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைப்படி, அவற்றையெல்லாம்விட மேலானதாக நவீன வசதிகளோடு இது அமையும். திரைப்பட நகரின் தனி அதிகாரியாக அரசு மூலம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு. எம். சண்முகம் நியமிக்கப்பட்டிருக்கிறார்".

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

# கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா

**கோ**வையில் புதிய விமான நிலையக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோவை பீளமேடு விமான நிலையம் ரூ.10 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அதன் தொடக்க விழா, 15.5.1992 அன்று நடந்தது. அத்துடன் ரூ.165 கோடியில் தொழில்பேட்டை மற்றும் கோவை மாவட்ட நலப்பணித் திட்டங்கள் தொடக்க விழாவும் நடந்தது.

விமான நிலையம் அருகே பிரம்மாண்டமான விழா மேடை அமைக்கப்பட்டு இருந்தது. விழா மேடை அருகே கேரளாவில் நடைபெறும் புகழ்பெற்ற 'பூரம்' திருவிழாவின் போது யானைகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதைப் போல 9 யானைகள் வரிசையாக நின்று இருந்தன. யானைகளின் மேல் அமர்ந்தபடி பல வண்ணக் குடைகளை யானைப்பாகர்கள் பிடித்து இருந்தனர். ஒரு யானையின் மீது, 'தமிழக முதல் அமைச்சரே வருக வருக!' என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.


விழாவுக்கு மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் தலைமை தாங்கினார். தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேடையில் இருந்த பொத்தானை அழுத்தி விமான நிலையப் புதிய கட்டடம் மற்றும் ரூ.164 கோடி செலவிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

'கோவை விமான நிலைய விரிவாக்கத்தினைத் திறந்து வைக்கும் வாய்ப்பினை வழங்கியுள்ள மத்திய அரசுக்கும், இங்கே இன்றைய தினம் வருகை புரிந்து - நான்தான் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு என் மீது அன்பு பாராட்டியுள்ள மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் புதிய திட்டங்கள் எதனையும், எந்த மாநில அரசும் தொடங்க முடியாத ஓர் இக்கட்டான நிலை உள்ளதை அவர்களும் நன்கு அறிவார்கள். அத்தகைய இக்கட்டான அவல நிலை சூழ்ந்துள்ள



நேரத்தில்தான் தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநிலமாக்கும் எங்கள் இலக்கு நோக்கி நாங்கள் விரைந்து பணியாற்றிவருகிறோம். அந்த இலக்கின் ஓர் பணிதான், இன்றைய தினம் தொடங்கப்படும் திருப்பூர் சிட்கோ தொழிற்பேட்டை ஆகும். இதேபோல் தொழில்துறையில் பின்தங்கியுள்ள பிற பகுதிகளிலும் இவ்வாண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டங்களுக்கு நிதி நிலை அறிக்கையில் வழி வகுத்துள்ளோம் என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

மேலும் இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியிலும் பற்றாக்குறையிலும் இன்றைய தினம் திருப்பூர் தொழிற்பேட்டை மட்டுமல்லாது - கோவை மாவட்டத்திலும் ஏறத்தாழ 161 கோடி ரூபாய்க்கான நலத் திட்டங்கள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் நிலவும் கடும் குடிதண்ணீர்ப் பஞ்சத்தின் கொடுமையைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நீண்ட நாட்களாகக் கோரிக்கை வடிவில் மட்டுமே இருந்து வந்த திட்டங்கள் இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

இவை மட்டுமல்லாது வளர்ந்து வரும் கோவை நகர் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளின் தேவைகளையும் மனதில் கொண்டு, உரிய மருத்துவ வசதிகளுக்கும்-தொழிலாளர் நலனுக்கும் - வீட்டு வசதி மற்றும் சுகாதார வசதி போன்ற ஏனைய வசதிகளுக்கும், திட்டம் தீட்டப்பட்டு இன்று அத்திட்டங்களுக்கான பணிகள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்லாது, தமிழகம் முழுமைக்கும் எங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கடும் நிதி நெருக்கடிச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு எண்ணற்ற நன்மைகளைச் செய்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

குறிப்பாக ஏழை எளிய விவசாயிகள் பலகாலமாகவே கடன் சுமையால் விழி பிதுங்கி நிற்கும் அவலத்தை உணர்ந்து கடன் சுமையால் வாடிநிற்கும் விவசாயிகளின் வாட்டம் போக்குவோம், எனத் தேர்தல் நேரத்தில் எல்லாத் தொகுதிகளிலும் நான் நேரில் வந்து வாக்குறுதி வழங்கி இருந்தேன்.



கடந்த 10 மாத காலமாக எனது அப்பிரதான வாக்குறுதியை நிறைவேற்றும் யோசனைகளை அதிகாரிகளிடம் கேட்டு வந்தேன். அரசின் வரவு செலவுத்திட்ட நிதி நெருக்கடியைச் சுட்டிக்காட்டி அது இயலாதே என்பதை அதிகாரிகள் என்னிடம் தெளிவாகக் கூறி வந்தனர். அவர்களிடம் நான் 'அத்தகைய பற்றாக்குறையைப் போக்கும் வழிமுறைகளைக் கூறுங்கள். அரசின் வருவாயைப் பெருக்கும் திட்டங்களைக் கூறுங்கள், ஏற்றுக் கொள்கிறேன்.

'இந்நாட்டின் முதுகெலும்பாய்த் திகழும் விவசாயி, ஒடிந்து மெலிந்து ஓடாய்த் தேய்ந்து போகாது தடுக்கும் இம்முயற்சிக்கு மட்டும் குறுக்கே நிற்காதீர்கள்' எனத் திட்டவட்டமாக நான் கூறியதை அடுத்து - இன்றைய தினம், நபார்டு நிறுவனம் தள்ளுபடி என்ற பேச்சே இருக்கக்கூடாது எனக் கடுமையாக கூறிய பின்னரும் கூட நாங்கள் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவது என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி 69.07 கோடி ரூபாய் அளவிலான விவசாயிகளின் கடன் சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதை அனைவரும் பாராட்டுவீர்கள் என நம்புகிறேன்.

இந்த 69 கோடியே 7 இலட்சம் கடன் சுமையை அரசு ஏற்றுக்கொள்வது என்பது வெறும் ஏட்டளவில் செய்துவிட்டு அதன் விளைவை அடுத்து வரும் அரசாங்கத்தின் தலையில் சுமத்திவிட்டுச் சென்றதைப் போல அல்லாமல், ஒவ்வொரு விவசாயிக்கும் அந்த விவசாயிக்குரிய ஊக்கத்தொகையை 'செக்' மூலம் நேரடியாக வழங்கும் அரசாங்கம், உங்கள் சகோதரி தலைமையில் அமைந்துள்ள இந்தத் தமிழக அரசு ஒன்றாகத்தான் இருக்குமே ஒழிய வேறொரு அரசாங்கமாக இருக்காது என்பதையும் பெருமிதத்தோடு கூறிக் கொள்கிறேன்.

மேலும் இதுவரையில் பணம் கட்டாது, தவணை கடந்த நிலையில் இருந்த விவசாயிகளுக்குத்தான் தள்ளுபடிச் சலுகை அரசாங்கத்தின் மூலம் முன்பெல்லாம் அறிவிக்கப் படும். ஆனால் இப்பொழுதுதான் முதல் முறையாக ஏற்கெனவே தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்திய அந்த நல்ல விவசாயிகளுக்கும், அவர் செலுத்திய தொகையின் அளவைக் கணக்கிட்டுக் கடன் கட்டாத விவசாயிகளுக்குத் தற்போது வழங்கப்படும் ஊக்கத்தொகையைப் போலவே விவசாயிகள் ஏற்கெனவே கட்டிய தொகையையும் திருப்பித் தரும் அரசாகத் திகழ்கிறது உங்கள் அரசு



என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்பீர்கள் எனக் கருதுகிறேன்.

அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த சில தினங்களில் இயற்கையாகவே அன்றைக்கு ஏற்பட்ட சில சூழ்நிலைகளினால் விலைவாசிகள் கூடின. ஆனால் இன்று நாங்கள் எடுத்துள்ள சில தீவிர நடவடிக்கைகளால் பொதுவாக விலைவாசிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளன. மேலும் நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கொஞ்சம் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். அதன் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து அடுத்த கணமே 3 ரூபாய் 30 காசு என்றிருந்த அரிசி விலையை 50 காசு குறைத்து 3 ரூபாய் என அறிவித்தோமே இதைப்போல் 50 காசு அளவிற்கு அரிசி விலையைக் குறைத்த வேறு ஆட்சி ஏதேனும் உண்டா என எண்ணிப்பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குறைந்த விலையில் அரிசி போடுவதால் மட்டும் அரசுக்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதையும், சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். இது மட்டுமின்றி இன்றும் கூட இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் அரிசி மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது என்பதையும் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

செயற்கரிய இத்தகைய சாதனைகளை நிகழ்த்தி வரும் எங்கள் அரசு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மூடப்பட்டுக் கிடந்த பல தொழில் நிறுவனங்களைத் திறந்து சாதனை படைத்துள்ளது.

புகழ்மிக்க பி அண்டு சி மில்லினைச் சென்னை நகரத்தில் நாங்கள் இயங்கச் செய்த விதமும், முந்தைய அரசாங்கத்தின் பழி வாங்கும் போக்கு காரணமாகத் திறக்கப் படாமல் இருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை மீண்டும் இயங்கச் செய்த பாங்கும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள தொழிலாளர் நலம் நாடும் அமைப்புகளால் பாராட்டப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இன்னும் மூடப்பட்டிருக்கும் சில ஆலைகளும் விரைவில் திறக்கப் படும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் இந்த நல்லநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்லநேரத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகருக்கு நேர்த்தி மிக்க விமான நிலைய வசதிகளைச் செய்திட முன்வந்துள்ள மத்திய அரசிற்கும், மாண்புமிகு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் இங்கே வருகை புரிந்து சிறப்பித்துள்ள மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும்- தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் எனது மன மார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது அமையப்பெற்றுள்ள வசதிகளைக் கொண்டு இவ்விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலைய அந்தஸ்துக்கு உயர்த்த முடியும் எனக்கூறப்படுகிறது.

எனவே 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என அழைக்கப்படும் இக்கோவை மாநகருக்கு மிக விரைவிலேயே பன்னாட்டு விமான வசதிகளையும் பெற்றுத்தர வேண்டும் என மத்தியப் பேரரசைத் தமிழக அரசின் சார்பில் இந்த நல்ல நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் சார்பில் இந்த நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொடுத்துள்ள சிவில் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தினருக்கும், மாநில அரசின் சார்பில் பலரும் பாராட்டும் வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை இங்கே நான் தொடங்கி வைக்கும் நல் வாய்ப்பினை அமைத்துத் தந்த மாவட்ட நிர்வாகத்தினருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்

# சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஹெக்சேன் உற்பத்திப் பிரிவு

நாட்டில் பெருகிவரும் ஹெக்சேன் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஹெக்சேன் உற்பத்தி செய்யும் ஒரு பிரிவை நிறுவியுள்ளது. ரூ.10 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பிரிவு ஆண்டுக்கு 36,000 கிலோ மீட்டர் ஹெக்சேன் உற்பத்தி செய்யும். ஹெக்சேன் பிரித்தெடுக்கும் பிரிவு, ஹெக்சேன் பதப்படுத்தும் பிரிவு மற்றும் உற்பத்தியாகும் ஹெக்சேனை வெளியில் அனுப்பும் பிரிவு என மூன்று பிரிவுகள் இந்த ஆலையில் இயங்கும். ஹெக்சேன் எனப்படும் இந்த பெட்ரோலிய திரவம், சமையல் எண்ணெய், மருந்து வகைகள், ரப்பர், பெயிண்டுகள், வாசனைத் திரவியம் மற்றும் பிளாஸ்டிக்ஸ் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும்.

உள்நாட்டில் கிடைக்கும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்களிலிருந்து ஹெக்சேனை அளிக்கும் மூலப்பொருளான LSRF-ஐ உற்பத்தி செய்யும் வசதிகள் எம்.ஆர்.எல்-ல் உள்ளன. இதனால் ஹெக்சேனை எம்.ஆர்.எல். குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்ய இயலும். 1,000 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புத் தொட்டிகளை இதற்காக எம்.ஆர்.எல். நிறுவியுள்ளது.

இந்தப் பிரிவுக்குத் தேவையான அனைத்துப் பொறியியல் வடிவமைப்பு, தொழில்நுட்பம் போன்றவைகளை என்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனமும், இந்தியப் பெட்ரோலியக் கழகமும் இணைந்து வழங்கியுள்ளன. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தி செய்யப்படும் ஃபுட் கிரேடு ஹெக்சேனின் தரம், ப்யூரோ ஆப் இண்டியன் ஸ்டாண்டர்டுஸ் (BIS) மையத்தாரால் பரிசோதிக்கப்பட்டு ஐ.எஸ்.ஐ. முத்திரையைப் பெற்றுள்ளது.

நாட்டில் தற்பொழுது சுமார் 400 பிரிவுகளுக்கு ஆண்டிற்கு ஏறக்குறைய 105,000 கிலோ லிட்டர் அளவு தேவைப்படுகின்ற ஹெக்சேன், ஆண்டிற்கு 15 சதவிகிதம் என்ற அளவில் உயரக்கூடும். தென்பகுதிகளில் இருக்கும் 130 பிரிவுகளுக்கு நாட்டின் தேவையில் 35 சதவிகித அளவு ஹெக்சேன் தேவைப்படுகிறது.

தற்போது இத்தகைய ஹெக்சேன் பம்பாயில் பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தியாகும் ஹெக்சேனை எம்.ஆர்.எல். விற்பனை செய்யும் பொழுது, இது தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா முழுவதையும் ஆந்திரா, கர்னாடக மாநிலங்களில் உள்ள சால்வண்ட் பிரித்தெடுக்கும் பிரிவுகளின் தேவையில் 50 சதவிகிதத்தை நிறைவு செய்யும்.

இதுவரை 125 வாடிக்கையாளர்கள், ஹெக்சேன் தேவைக்காகப் பதிவு செய்துள்ளனர். எம்.ஆர்.எல்-ல் கிடைக்கும் மிகுதியான ஹெக்சேனைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் பின்னர் பரிசீலிக்கப்படும்.

---

களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் தேசிய விமான நிலையக்குழுத்தலைவர் ஏர்மார்ஷல் சி.கே.எஸ்.ராஜேஷ்வரவேற்றார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. பரூக் மரைக்காயர் விழாவில் கலந்து கொண்டார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. இ. மது சூதனன், திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன், திரு. செல்வகணபதி, திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. நாகூர் மீரான், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கலைவாணன் நன்றி கூறினார்.

கோவை விமான நிலையம் ரூ.12 கோடி செலவில் புதுப்பிக்கப் பட்டது ஆகும். பயணிகள் இருக்கும் இடம் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. உள்ளே வங்கி, அஞ்சல் நிலைய வசதிகள் உள்ளன. உணவு விடுதியும் உண்டு. ஒரே நேரத்தில் 350 பயணிகள் வந்து செல்ல முடியும்.

ஓடு பாதை, தளமாக்கப்பட்டிருப்பதால், 'ஏ 320' ரக ஏர் பஸ் விமானங்கள் வந்து இறங்க முடியும். விமானங்கள் வந்து இறங்கவும், புறப்பட்டுச் செல்லவும், கண்காணிக்கவும் நவீனக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள. இரவில் விமானம் இறங்குவதற்கு வசதியாக ஓடு பாதையில் வண்ண விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.



# உதகை-உவகைமிகு சிறப்பிடம்!

## உதகையில் மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

எழில் மிகு இயற்கைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு, மலைகளின் அரசியாய்த் திகழும் நீலகிரி மலையில் நடைபெறும், மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவிலும், அரசு நலத்திட்டங்களின் தொடக்கம், மற்றும் அடிக்கல் நாட்டும் விழாவிலும் கலந்து கொண்டு, குளுமையான இச்சூழ்நிலையில், வெள்ளம் போல் திரண்டிருக்கும் இம்மாவட்ட மக்களையும், வளமும் வசந்தமும் பொருந்திய இந்நகரைக் கண்டுகளிக்க, வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளையும் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைதிக்கும் இயற்கை எழிலின் கண்கொள்ளாக் காட்சிக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்த காஷ்மீர் பள்ளத்தாக்கு, தீவிரவாதிகளின் அதிரடி நடவடிக்கைகளுக்கு ஆளான பின்னர், இன்று இந்திய நாட்டிற்கு விரும்பிச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள், அதிக அளவில் வருகை புரியும்- நேர்த்தி மிக்க ஸ்தலம்தான், நம் உதகமண்டலமாகும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை, பச்சைப் பசேல் எனக் காட்சி அளிக்கும் வளர்ந்தோங்கிய மரங்களும் - அம்மரங்களைத் தாங்கி நிற்கும் மாமலைகளும் - பள்ளத்தாக்குகளும், இவை அனைத்தும் இணைந்த பெரும் வனங்களும்; அவற்றிடையே உலவும் வன விலங்குகளும், வண்ணத்துப் பூச்சியிலிருந்து வண்ண வண்ண நிறங்களையும், அழகிய தோற்றங்களையும் கொண்ட பறவை இனங்களும்; அவை இடையறாது எழுப்பும் இனிய ஒலிகளும்; செல்லும் இடமெல்லாம் மணக்கும் யூகலிப்டஸ் கலந்த இனிய நறுமணமும்; கனவுலகக் காட்சி போல் அமைந்துள்ளதால், உலகம் முழுவதுமிருந்து இம்மலைகளின் இராணியாம் உதகை நோக்கி ஓடி வருகிறார்கள்.

அந்த அளவுக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இதன் காந்தச் சக்திக்கு, இம்மலையெங்கும் ஓங்கி வளர்ந்து உயர்வுடன் காட்சி அளிக்கும் மரங்களே காரணமாகும்.

எனவே தான் உதகையில் மட்டுமல்லாது, தமிழகத்தின் அனைத்து மலைப் பகுதிகளிலும் உள்ள மரங்களைப் பாதுகாக்க, முழு மூச்சான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

நமது தமிழகத்தின் வன வளத்தினைக் காப்பது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும். ஆண்டாண்டுக் காலமாக ஓங்கி, உயர்ந்து வளர்ந்துள்ள

மரங்களை, ஒரே நாளில் ஒரு சிலர் அழித்து விடும் கொடுமை, சில இடங்களில் நடந்து கொண்டு இருப்பதை முற்றிலும் தடுக்க, எங்கள் அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்டுள்ளது. ஒரு மரத்தை வளர்ப்பது என்பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை, எல்லோரும் உணர்ந்திருந்த போதிலும், எளிய குறுக்கு வழியில், விரைவில் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில், ஒரு சிலர் இது போன்ற அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இயற்கை வளத்தையே பாழாக்கி விடுகின்றனர். இவர்களுக்குத் தீய சக்திகள் சிலர் உறுதுணையாக உள்ளனர் என்பதை, நான் நன்கு அறிவேன். இவர்களை எல்லாம் கட்டுப்படுத்தவே, அரசு கடுமையான நடவடிக்கைகள் தொடர்வதோடு, கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்ய, சட்டத்திருத்தம் ஒன்றைக் கூட அண்மையில் கொண்டு வந்துள்ளோம்.

இங்குள்ள இனிய காட்சிகளை எல்லாம் காணும்தோறும், எல்லையற்ற ஆனந்தமடைந்து செல்கிறார்கள் இங்கே வரும் அயல்நாட்டார். இந்நாட்டாரும் திரும்பத் திரும்ப ஊட்டி சென்று வரவேண்டும், என்ற உணர்வோடு வந்து செல்கின்றனர்.

ஆனால், உதகை மலையின் பேரழகைக் காணும் ஒவ்வொரு நொடியும், என் மனதில், 'இத்தகைய இயற்கையின் எழில் செருக்கை, இம் மலைக்குச் சேர்த்திட, எத்தனைத் துன்பங்களை இம்மலை வாழ் மக்கள் ஏற்றிருப்பார்கள்?' என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது.

இதனைத் தான் எனக்கு அரசியல் பாலபாடம் சொல்லித் தந்த, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் உணர்த்திச் சென்றுள்ளார்.

'சித்திரச் சோலைகளே! உம்மை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ,
உங்கள் வேரினிலே'

எனும் உணர்வினைத்தான், எங்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஊட்டிச் சென்றுள்ளார்.

எனவேதான் உதகமண்டலத்திற்கோ, கொடைக் கானலுக்கோ, உல்லாசப் பயணிகளின் வசதிக்கெனத் திட்டம் தீட்டுகிற அதே நேரத்தில், இம் மலைவாழ் மக்களாக இங்கேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களின் நன்மைக்கென திட்டமிடுவதையும், எங்கள் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

உல்லாசப் பயணிகளின் வசதிக்கென இங்கே செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், இங்கேயே வாழ்ந்து வரும் மக்களின் வாங்கும் சக்தியை, ஒவ்வொரு ரூபாய் அளவுக்குக் குறைத்திடும் என்பதை மனதிலே கொண்டு அந்த அளவுக்குப் பல திட்டங்கள், இப்பகுதி மக்களின் நன்மைக்காகவும், நிறைவேற்றி விட்டுத்தான், ஏனைய உல்லாசப் பயணத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம் என்னும் செய்தியை, மெத்த மன நிறைவோடு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இக்குளிர் மலைப் பிரதேசத்தில், கடுங்குளிர் காலத்தில், அக்குளிரைத் தாங்கும் உரிய கம்பளி ஆடைகள் எதுவும் இல்லாது, சணல் சாக்குகளையே கோணிகளாக்கிக் கொண்டு, தங்கள் காலத்தை கழிந்து வரும் இம் மலை வாழ் மக்களான, தோடர் மற்றும் படுகர் ஆகிய இன மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்த, உங்கள் சகோதரியான நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன் என்பதை, உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், என்னை இந்த அளவுக்கு வளர்த்து உயர்த்திய பெருமக்கள் உங்களைப் போன்று, சமுதாயத்தில் அடித்தளத்து மக்கள் தான். இதனை நான் என்றென்றும் மறந்திட மாட்டேன் என்ற உணர்வினை, நன்றிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





முதல் முறையாக இந்த ஆண்டு, 'Carnival-92' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். நாளைக் காலை நடைபெறவுள்ள Carnival-1992, அனைவரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம், அதற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பான முறையில் செய்திருப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இன்று புதிதாக உதகையின் கோடைவிழாவில் அறிமுகப்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சி, சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும்; இனி ஒவ்வொரு ஆண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு, கூடுதலான சிறப்பை இது சேர்க்கும் எனவும் நம்புகின்றேன்.

Ooty lake-ஐத் தூய்மைப்படுத்தி, விரிவாக்கி, இதனைக் காஷ்மீர் பள்ளத்தாக்கின் 'டல்' ஏரியைப் போல் சிறப்பு பெறச் செய்ய வேண்டும் என்பதே, எனது ஆசை ஆகும். ஊட்டி நகருக்குத் தேவையான குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் கிடைக்க, நல்லதொரு நிரந்தரத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது, என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கையை வெளியிட்டுள்ள இந்த நல்ல நேரத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் நேற்று (15.5.92) கோவையிலும் இன்று இங்கு நடைபெற்ற விழாக்களிலும் தமிழகத்தில் சுற்றுலாத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மத்திய அரசு உதவும் என்று தெரிவித்தார்கள். இன்றைய தினம் வெளியிடப்படும் சுற்றுலாக் கொள்கைக் குறிப்பேட்டில் தமிழகத்திற்குத் தேவையான முக்கியச் சுற்றுலா முன் மாதிரித் திட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தத் திட்டங்களை மாநில அரசு நிறுவனங்கள் மூலமாகவும், தனியார், கூட்டுத் துறை நிறுவனங்கள் மூலமாகவும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரசுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி அளிக்கும் என்றும், தேவையான நிதி உதவி வழங்கும் என்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் நேற்று என்னிடம் தந்த உறுதிக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள 'Regional Catering Institute' அமைக்கும் திட்டத்தை விரைவில் உதகையில் உள்ள 'கேத்தி' கிராமத்தில் நிறுவுவதற்கு அனுமதியும் நிதி உதவியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலிருந்து இனி அனுப்பப்படும் சுற்றுலா முன் மாதிரித் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து நிதி உதவியுடன் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் சிந்தியா அவர்கள் நேற்று பேசியபோது, தமிழகத்தில் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மத்திய அரசினை அணுகுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார் இதுபோன்ற சில புதிய திட்டங்களுக்காக நாங்கள் மத்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு அவர்கள் நாங்கள் கவனிக்கிறோம், பரிசீலனை செய்கிறோம், உங்களுக்கு இது குறித்து தெரிவிக்கிறோம் என்ற பதிலைத் தான் தந்திருக்கிறார்கள், அதனால்தான் தமிழக அரசு மேற்கொள்ளும் சுற்றுலா முன்னேற்றத் திட்டப்பணிகளை நம் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வசதிகளைக் கொண்டும் நிறைவேற்ற முனைந்து இருக்கிறோம். இது போன்ற விழாக்களில் முதல் அமைச்சரும் மற்ற மாநில அமைச்சர்களும் மத்திய அமைச்சர்களை மாநில அரசின் திட்டங்களுக்கான அனுமதி வழங்க வலியுறுத்துவதே வழக்கம். அதற்கு மத்திய அமைச்சர்கள் நாங்கள் ஆராய்கிறோம், பரிசீலிக்கிறோம்,

விரைவில் பதில் வரும் என்று தெரிவிப்பார்கள். தமிழகத்தின் வரலாற்றிலேயே ஒரு மத்திய அமைச்சர் மாநில அரசின் திட்டங்களுக்காக எங்களை அணுகுங்கள் என்று சொல்வது இதுவே முதல் முறை. அதற்காக மத்திய அமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Palace on Wheels ரயில் விடுவது குறித்து பேசும்போது நான் ரயில்வே அமைச்சராக இருந்தபோது என்னிடம் கேட்டிருக்கலாம். நான் இப்போது சுற்றுலாத் துறை அமைச்சராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். இது குறித்து மத்திய அமைச்சருக்கு ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். இந்த Palace on Wheels என்பது சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தத்தான் என்பதால் இதை மத்தியச் சுற்றுலாத் துறை அமைச்சர் ரயில்வே அமைச்சகத்தைச் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்பதால் அவர்களை அந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டிற்குப் பெற்று தரவேண்டும். இந்த Palace on Wheels என்ற பெயரை மாற்றலாம் என்று இங்கே மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகம் புராதன சிறப்புகளுக்கும், கலைகளுக்கும் பெயர் பெற்ற இடமாக இருப்பதால் அந்த ரயிலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் தாங்கள் மகாராஜா போல பயணம் செய்கிறோம் என்று மகிழ்வார்கள். எனவே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கும்போது Palace on Wheels என்ற பெயரை மாற்றாமல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டியில் ஒரு சிறிய விமான தளம் அமைப்பதற்கு ஆன அனுமதியை மத்திய அமைச்சர் அவர்கள் விரைவில் வழங்க வேண்டும். கோவையில் பெரிய விமான நிலையம் இருக்கும்போது இங்கு ஒரு விமான தளம் தேவையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். காஷ்மீரில் பயங்கரவாத சூழ்நிலை இருப்பதால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருவதால் சாலைப் போக்குவரத்து மூலம் உதகை அடைவது சிரமமாக உள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையில் உதகைக்கு ஒரு சிறு விமான தளம் அமைத்து வாயு தூத், ஹெலிகாப்டர் ஆகியவை வந்து செல்ல வசதி செய்து தர அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க மக்கள் உதவ வேண்டும் என்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டார். உதகை உலக வரைபடத்தில் சிறந்த சுற்றுலாத் தலமாக இடம்பெற இந்த மாவட்ட மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அந்த உழைப்பின்றி எதையும் சாதிக்க முடியாது. நான் சிறு வயது முதற்கொண்டே உதகைக்கு வந்துள்ளேன். ஆனால், இன்று மின்விசிறியைப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு நகரின் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பெருமளவில் கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமையப்பெற்றதே காரணமாகும். எனவே உதகையின் சுற்றுச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டுமெனில், இனி வரும் காலங்களில் அத்தியாவசியமான கட்டடங்கள் அல்லாது பிற புதிய கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற முடிவை எடுத்தால்தான், இந்த முடிவில் கண்டிப்பாக இருந்தால்தான், உதகையின் இயற்கைச் சூழலை நாம் காப்பாற்ற முடியும். பெரிய Convention Centre போன்ற அத்தியாவசியமான கட்டடங்கள் கட்டுவதற்குதான் அனுமதி வழங்கலாம். இதற்கு உதகை மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் இன்றைய தினம், தமிழகத்தின் சுற்றுலாக் கொள்கையினை வெளியிடுவதில், பெருமிதம் அடைகின்றேன். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், அரசு, கூட்டுத்துறையின் மூலமோ, அல்லது அரசின் வழிகாட்டும் திட்டத்தின் மூலமோ, செய்து தர முடிவு செய்துள்ளோம். தமிழகத்திலுள்ள எல்லாச் சுற்றுலா மையங்களையும் மேம்படுத்த, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அத்தகைய எங்கள் முயற்சியில் உதகை முதலிடம் பெற்றுள்ளது.

வெகு விரைவில் உதகை, உலகம் தழுவிய உல்லாசப் பயண வரைபடத்தில், சிறப்பிடம் பெறும் அளவுக்குப், பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

'உதகை - உவகை மிகு
சிறப்பிடம் - சீரிடம்'

எனும் சிறப்பை விரைவில் பெறும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.



அந்த அடிப்படையில்தான், நீலகிரி மலையின் பூர்வீகக் குடிமக்களாகிய தோடர் இன மக்களுக்கு, எங்கள் அரசு பல நலத்திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றது. அவற்றுள் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்று, ஒவ்வொரு தோடர் குடும்பத் திற்கும் 5 ஏக்கர் நிலம், வேளாண்மை செய்வ தற்கு, அல்லது மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்து வதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலங்களை மேம்படுத்திப் பயிர் செய்வதற்காக, ஒவ்வொரு வருக்கும் அதிகபட்சமாக 25,000 ரூபாய், Toda Primary Agricultural Co-operative Bank மூலமாக, நீண்ட காலக் கடனுதவி பெற, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை வைத்துக் கொண்டு, அவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப் பட்ட அரசு நிலங்களில், தேயிலை பயிர் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும், அவர் களைப் பாதுகாக்கும்.

இன்றைய தினம், தொழில் துறையின் கீழ் இயங்கும், INCOSERVE நிறுவனத்தின் சார்பில் BIKKETTY-இல் அமைக்கப்பட்டுள்ள, 15-வது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையைத் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடை கிறேன். இப்புதிய தொழிற்சாலை தொடங்கப் படுவதால், அப்பகுதியிலுள்ள சுமார் 1,000 சிறு விவசாயிகள், தங்களது தேயிலைகளை இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையில், நியாயமான விலைக்கு விற்பனை செய்து, பயனடையும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய விழாவில், இம்மாவட்டத்திற்கு மொத்தமாக, 32.29 கோடி ரூபாய்க்கான திட்டங் களைத் தொடங்கி வைத்ததிலும், பல திட்டங் களுக்கு அடிக்கல் நாட்டி வைத்ததிலும், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



முடியாத நிலையில் உள்ளனர் என்ற செய்தி, என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

எனவே, இந்த ஆண்டு முதல், இவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை, 25,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்க ஆணையிட்டு உள்ளேன், என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். NABARD - நிறுவனத் தின் நிதி உதவியுடன், 7 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம், தோடர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திலும், தேயிலை பயிர் செய்யும் வாய்ப் பைப் பெறுவார்கள். ஆதிவாசிகளான அவர்கள், வறுமையில் வாடாமல் தடுத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, எங்கள் அரசு

வருடா வருடம் உதகையில் நடைபெறும் மலர்க் கண்காட்சி, இந்த ஆண்டு மிகவும் சிறப்பாகவும், நேர்த்தியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் அனைவரும், மலர்க் கண்காட்சியைக் கண்டு களித்து, மன நிறைவோடு செல்வார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டுகளில் இருந்ததைப் போல், மலர்க் கண்காட்சி எனக் கூறிவிட்டு, மலர் களே இல்லாத நிலை, இந்த ஆண்டு முதல் இருக் காது என்ற உத்தரவாதத்தையும், இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



# உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி

மலைகளின் அரசியாம் உதகையில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற வண்ணமிகு மலர்க் கண்காட்சி இவ்வாண்டு 16.5.'92-ஆம் நாள் கோலாகலமாகத் தொடங்கியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பதவியேற்றபின், முதன் முறையாக உதகைக்கு வருகை புரிந்து மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைப்பதால் இந்நிகழ்ச்சி மிகுந்த முக்கியத்துவத்தையும் பொலிவினையும் பெற்றுள்ளது. முதல்வர் அவர்களை வரவேற்க உதகை சுறுசுறுப்பாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. பச்சைப்பசேலெனும் புல் வெளிகளாலும், கவின்மிகு மலர்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு புதுப்பெண்ணாகப் பூத்துக் குலுங்கினாள் உதகை ராணி.

16.5.1992 காலை நீண்டதொரு பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டது போன்று தோற்றமளித்த தாவரவியல் பூங்காவில் குவிந்திருந்த ஆயிரமாயிரம் மக்களின் கண்கள் முதல்வரை எதிர்நோக்கியிருந்தன.

முதல்வர் அவர்கள் சரியாக 10.50 மணிக்குத் தாவரவியல் பூங்காவிற்கு வருகை தந்தார். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீலா நாயர் மலர்ச்செண்டு கொடுத்து முதல்வரை வரவேற்றார். அமைச்சர் பெருமக்கள் பலரும் அவரை வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு மத்தியச் சுற்றுலா மற்றும் விமானப் போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் முன்னிலையில், உதகை மலர்க்கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பல வண்ண மலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தார்.

தாவரவியல் பூங்காவில் முதல்வர் அவர்கள் 'கினார்' எனும் மரக் கன்றை நட்டார்.

மலர்க் கண்காட்சியில் ஓட்டல் சவேரா, வெடி மருந்துத் தொழிற்சாலை, ராஜ்பவன், ஸ்டேட் பாங்கி, உபாசி, நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், தோட்டக் கலைத்துறை உள்பட 12 அரங்குகள் பங்கேற்றன. மொத்தம் 8,000 பூந் தொட்டிகளில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. அனைவரின் விழிகளுக்கும் விருந்தளித்தன. 1,600 வகை ரோஜாக்களும் 150 வகை டேலியாவும், பேன்சியூ, டியூப்ரஸ், பிகோலியா, இரசாந்தம், சந்துலியம், டெலிபினியம், அன்டிரேனியம், பிரெஞ்சு மெரி கோல்டு, பிலிமிளா, லேடிஸ் பர்ஸ் மற்றும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மலர்களும் பூத்துக் குலுங்கின.

நுழைவு வாயிலில் மலர்களால் 'மலர்க் கண்காட்சி 1992' என அழகுற எழுதப்பட்டிருந்தது. மலர்களால் அலங்கார யானைகளும், மலர்க் கிரீடமும் அமைக்கப்பட்டிருந்தன.

நெஞ்சையள்ளும் இம்மலர்க் கண்காட்சி காணக் கண்கோடி வேண்டும் என வியக்காத உள்ளங்களே கிடையாது எனக் கூறலாம்.

# அரசு நலத்திட்டத் தொடக்க விழா

மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்து விட்டு, பள்ளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அரசு நலத்திட்ட தொடக்க விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11.10 மணிக்கு வந்தார். விழாவுக்கு, தமிழக மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சந்தியா அவர்கள் முன்னிலை வகித்தார். ரூ.36 கோடிக்கான அரசு நலத்திட்டப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது அடிக்கல்லின் மேல் புறம் உள்ள ஒரு மூடி திறந்து கொள்ள, அங்கிருந்து பறவைகள் விடுதலை பெற்று வானத்தில் பறந்தன.

பின்னர் புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைப்பதற்கு அடையாளமாக மற்றொரு பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தியதும், வட்டமான மேசை மீது இருந்த வட்டமான திரைச்சீலை கீழே இறங்கியது. அந்தச் சிறிய மேடையில், ஒரு சிறிய சேரன் பேருந்து காட்சி அளித்தது.

பின்னர், தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்தக வடிவில் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை, மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இதே விழாவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் ''டைம் சேரிங்'' என்ற சுற்றுலாத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தில முதலில் சேர்ந்த, கோவை சசி சாமிநாதன் மற்றும் அவர் மனைவியிடம் அதற்கான அனுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

## 'கார்னிவெல்-92'

**இந்த ஆண்டு முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'கார்னிவெல்-92' என்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.**

**இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடக்க விழா ஊட்டியில் சி.டி.சி. சதுக்கத்தில் நடைபெற்றது. இந்த அலங்கார அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிடுவதற்காகத் தனியாக மேடை அமைக்கப்பட்டிருந்தது.**

விழாவில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.5.92 அன்று காலை 9.55 மணிக்கு சி.டி.சி. சதுக்கத்துக்கு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் லீனாநாயர், இ.ஆ.ப. மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன், திரு. செல்வகணபதி, திரு. நாகூர் மீரான், திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொன்னுசாமி, அரசு கொறடா திரு. ச.பா. பட்டாபிராமன் ஆகியோர் வரவேற்றனர்.

சற்று நேரத்தில் மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் விழா நடைபெறும் இடத்துக்கு வந்தார். அவரை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றார்கள்.

பின்னர் விழா நிகழ்ச்சி தொடங்கியது- 'கார்னிவெல்-92' என்று எழுதப்பட்ட அட்டை 'கியாஸ்' அடைக்கப்பட்ட பலூன்களில் 'பாராசூட்' போன்ற அமைப்பில் தொங்கவிடப்பட்டு இருந்தன. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தனர். விழா தொடங்கியதற்கு அறிகுறியாக இந்தப் பலூன்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பறக்கவிட்டார். வண்ணப் பலூன்கள் அழகாக வானத்தில் பறந்து சென்றன. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்களும் பலூன்களைப் பறக்கவிட்டார். இதையடுத்து விழா தொடங்கியது.

முதலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நாதசுரம், தவில், வாசித்தபடி கலைஞர்கள் வந்தனர்.

அடுத்து, முகப்பட்டயம் அணிந்த 9 யானைகளும் நடுவே குட்டி யானையும் நடந்து வந்தன. இதைத் தொடர்ந்து தர்மபுரி மாவட்ட போலீஸ் பாண்டு வாத்தியக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், நீலகிரி மாவட்ட மலைச்சாதியினரான படுகர் இனத்தவர் நடனம் இடம் பெற்றது.

அடுத்து, கேரளாவைச் சேர்ந்தவர்கள் செண்டைமேளம் அடித்தபடியும், கொம்பு வாத்தியத்தை ஊதியபடியும் மேளத்தை ஏற்றி இறக்கிக் காட்டினார்கள். அடுத்து, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அலங்கார வண்டி இடம் பெற்று இருந்தது. அதில் 'மக்கள் மனம் குளிர, மலர்ந்த முதல்வரின் முத்தான திட்டங்கள்' என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.

(26 — ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புதிதாக 41 துணை மின் நிலையங்கள்

தமிழகத்தில் மின் விநியோகத்தை அதிகரிக்க, புதிதாக 41 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் உதகமண்டலத்தில் தெரிவித்தார்.

உதகையில் 10 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்று ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். ஓர் ஆண்டுக்குள் அதற்கான பணிகள் முடிவடைந்துவிடும்.

பல்வேறு நீர்மின் நிலையங்களில் ஆய்வு நடத்தி அவற்றில் உள்ள குறைபாடுகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளிக்க சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

## பெரியார் மாவட்டத்தில்:

# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1992-93-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது.


1992-93-ஆம் ஆண்டுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.34.970 இலட்சம் வறட்சி நிவாரணப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் கசிவு நீர்க் குட்டைகள், சிறு பாசனக் குளங்கள் மேம்பாடு செய்தல், சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், 106 பள்ளிக் கட்டடங்கள், ரூ.146.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 98 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் 92 ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 88 சத்துணவு மையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குவதில், இதுவரை 30 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 404 ஊரகக் குடிநீர்ப் பணிகளில் இதுவரை 220 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.70 இலட்சம் செலவில் 3,500 தெரு விளக்குகள் அமைப்பதில், இதுவரை 1,754 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 196 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.381.71 இலட்சம் செலவில் டுக்கப்பட்டதில், இதுவரை 89.36 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.25.20 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 20 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணிகளில், இதுவரை 16 முடிக்கப்பட்டுள்ளன. ரூ.2.390 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறுபாசனக் குளங்கள் அமைக்க எடுக்கப்பட்டதில், இரண்டும் முடிக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,050, நிர்ணயம் செய்யப்பட்டது. நாளது வரையில் 30 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ், பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை மீறி, பெரியார் மாவட்டத்தில் தக்க பில் இன்றி, அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தியும், உரிமம் இன்றிக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்ததையும், கண்டுபிடித்து இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் ரூ.41,000 மதிப்புள்ள 13.39 டன் நெல்லும், ரூ.5,631 மதிப்புள்ள 1.717 டன் அரிசியும், ரூ.52 மதிப்புள்ள 20 கிலோ கோதுமையும், ரூ.83,000 மதிப்புள்ள 10 டன் நிலக்கடலைக்காயும், ரூ.3,290 மதிப்புள்ள 1,100 லிட்டர் மண்ணெண்ணெயும், ரூ.27,978 மதிப்புள்ள 0.81 டன் மிளகாய் வற்றலும், ரூ.820 மதிப்புள்ள 150 லிட்டர் டீசலும், ரூ.258 மதிப்புள்ள 15 லிட்டர் பெட்ரோலும் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,62,029 ஆகும்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஏப்ரல் மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதி திராவிடர்களுக்கு ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 764 நபர்களுக்கு ரூ.171.10 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 402 நபர்களுக்கு ரூ.106.70 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 212 நபர்களுக்கு 46.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



வேளாண்மைக்குத் தேவைப் படும் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அத்துடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. ஏப்ரல் 1992 திங்கள் முடிய குறுகிய காலக் கடன் 99.04 இலட்சமும், மத்தியக் காலக் கடன் 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 58.08 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்க பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டுக்கு ஏப்ரல் 1992 திங்கள் முடிய ரூ.0.93 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் பணியினை, பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. 1992-93 நிதியாண்டுக்கு 1992 ஏப்ரல் திங்கள் முடிய இச்சங்கங்கள் 201.43 இலட்சத்திற்கு சங்க உறுப்பினர்களின் வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.

கடந்த 1991-92-ஆம் ஆண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டன. நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 1992 வரை 48,758.200 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன. 1992-93-ஆம் நடப்பாண்டில் 1,200 ஏக்கர்கள் அளவில் மல்பரிப் பயிர் இறவைச் சாகுபடியின் கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 155.75 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 11.00 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த முறையில் அதாவது உழவியல், இரசாயனம், உயிரியல், இயந்திர முறைகளை ஒருங்கிணைந்துப் பயன்படுத்தி குறைந்த செலவில் சிறப்பான முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க, மாவட்ட அளவில் 440 விவசாயிகளுக்கு இருநாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்கும் விவசாயிகளுக்குப் பயணம் மற்றும் இதரச் செலவினங்களுக்கான உதவித் தொகையும், பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களும், தொழில்நுட்பக் கையேடுகளும், ரூ.44 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

## மலேரியா நோயைத் தடுத்திட..

சென்னை நகரில் மலேரியா நோய் தற்போது அதிக அளவில் காணப்படுகிறது. நகரில் உள்ள கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தொட்டிகளில் உற்பத்தியாகும் கொசுக்களின் மூலம் தான் மலேரியா நோய் பரவுகிறது. ஏறத்தாழ ஒரு இலட்சம் கிணறுகளும், 75,000 மேல் நிலைத் தொட்டிகளும் சரிவர மூடப்படாமல் கொசு உற்பத்திக்கு ஏதுவாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தகைய கொசு உற்பத்தியினைத் தடுத்தால்தான், சென்னை மாநகரில் மலேரியா நோயினை ஒழிக்க முடியும்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் உள்ள அத்தகைய நீர் நிலைகளைக் கொசு உற்பத்திக்கு இடமளிக்காதவகையில் மூடிகளைப் பொருத்தி, மாநகராட்சியின் சுகாதாரப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுகிறோம்.

நான்கு அடி விட்டமுள்ள ஒரு கிணறு இரண்டு அங்குல சிமெண்ட் பலகையினால் மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்பு தகடு மூடியைப் பொருத்துவதற்கும் ரூ.430 செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதேபோல் 4 சதுர அடி மேல்நிலை நீர்த் தொட்டியை மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்புத் தகடு மூடி பொருத்துவதற்கும் ரூ.415 செலவாகக்கூடும்.

இத்தகைய பணியினை மேற்குறிப்பிட்ட செலவில் செய்து முடித்திட சம்மதம் அளித்துள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியல், மாநகராட்சி மண்டல அலுவலர்களிடமும் உதவி சுகாதார அலுவலர்கள், பூச்சியியல் வல்லுனர்களிடமும், கோட்ட அலுவலகங்களிலும் உள்ளது. மற்ற விவரங்களுக்குத் தொலைபேசி மூலம் எண்.584510 இணைப்பு எண்.272 தொடர்பு கொள்ளவும்.

சூரிய வெளிச்சம் படாமல் மூடிவைப்பதால் கிணற்றுத் தண்ணீர் எப்போதும் கெடுவதில்லை.

வீடுகளில் உள்ள நீர் நிலைகளைக் கொசு வளர்ச்சிக்கு ஏதுவாக வைத்திருப்பது, தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டத்தின்கீழ் குற்றமாகும்.

## குடும்ப நலம்

• சிறிய குடும்பமே வளத்துக்கு வழி என்ற அடிப்படையில் குடும்ப நலத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை, சுமார் 13 கோடி குழந்தை பிறப்புகள் தவிர்க்கப் பட்டுள்ளன. 1991-இல் மட்டும் 1.2 கோடி பிறப்புகள் தவிர்க்கப் பட்டன. 1980 வரை நான்கு கோடியும், 1990 வரை 11.8 கோடி யும் குழந்தை பிறப்புகள் தவிர்க்கப் பட்டன.

சிறு குடும்ப நெறித்திட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்வதற்காக அரசு தொடர்ந்து பல புதிய முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் சேவையின் தரத்தை மேம்படுத்துவது தாய்-சேய் நலத் திட்டத்தை விரிவுபடுத்தி, வலுப் படுத்துவது, துறைகளிடையே ஒத் துழைப்பை மேம்படுத்துவது ஆகிய வற்றில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

## பட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்கு

உலகப் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாமிடத்தை வகிக் கிறது. 1989-90-இல் 12,016 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. 1990-91இல் இது 12,665 மெட்ரிக் டன்னாக உயர்ந் தது. சென்ற நிதியாண்டில் 1991-92 டிசம்பர் வரையிலுமான ஒன்பது மாத காலத்தில் 8,523 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பட்டு ஜவுளி வகைகள் ஏற்றுமதியும் செய்யப் படுகின்றன.

1989-90-இல் ரூ.392 கோடி மதிப்பிற்கு 358 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதி யானது. 1991-92-இல் (பிப்ரவரி 92 வரை) ரூ.600 கோடி மதிப் பிற்கு 350 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது.

(23–ஆம் பக்கம் தொடர்ச்சி)

அணிவகுப்பில் அடுத்து, சிதம்பரனார் மாவட்ட வீரர்களின் ஒயிலாட்டம் இடம் பெற்றிருந்தது. கையில் சிவப்பு நிறத் துணியைக் கட்டிக்கொண்டு, கால்களை ஒரே சீராக அடி எடுத்து வைத்து ஆடி னார்கள். ஊட்டி லாரன்ஸ் பள்ளி மாணவர்களின் பாண்டு வாத்தியக் குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இதே பள்ளி மாணவ-மாணவியர், கையில் வண்ணப் பந்து களுடன் உடற்பயிற்சி செய்து காட்டினர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் களின் கோலாட்டம் நிகழ்ச்சி இடம் பெற்றது. அணிவகுப்பில் அடுத்து இடம் பெற்றது, ஆந்திர மாநிலத் தின் லம்பாடி நடனம் ஆகும். ஆண்களும், பெண்களும் பல வண்ண உடைகள் அணிந்து ஆடிய ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. சுற்றுலாத் துறையின் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு அடுத்து இடம் பெற்றது. பிறகு, கோவை நகரக் காவலரின் பாண்டுவாத்திய இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டம் பர்கூரைச் சேர்ந்த இளைஞர்களின் சேவை ஆட்டம் நடைபெற்றது. கால்களில் சலங்கை கட்டி, கையில் கம்பு களுடன் உறுமி மேளத்திற்கு ஏற்ப நடனம் ஆடினார்கள். தோட்டக் கலைத்துறை சார்பில் அலங்கார வண்டி வந்தது. அடுத்து புனித ஹில்டா பள்ளி மாணவ-மாணவி களின் ஸ்காடிஷ் நடனம், கூட்டு உடற்பயிற்சி, பஜன் நடனம் ஆகி யவை இடம்பெற்றன.

அடுத்து, போலீஸ் துப்பறியும் நாய்களின் சாகச நிகழ்ச்சி இடம் பெற்றது. முதலில் இரண்டு துப்பறி யும் நாய்கள் மாண்புமிகு முதல்வர் முன்பு மண்டியிட்டு வணக்கம் தெரி வித்தன. பிறகு தீப்பந்தத்திற்குள் பாய்ந்து சாகசம் புரிந்தன.

மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு, துப்பறியும் நாய் மலர்ச் செண்டை வாயில் கவ்விக் கொண்டு சென்று கொடுத்தது. அதை வாங் கிய முதல்வர் நாயை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

சீனா நாட்டுக் கதைகளில் இடம் பெறும் தீயைக்கக்கும் 'டிராகன்' என்னும் நடனமும் இடம்பெற்றி ருந்தது. 40 அடி நீளமுள்ள டிராகன் விலங்கின் உருவத்தை சுமந்தபடி நடனக் கலைஞர்கள் ஆடினர்.

வனத்துறை அலங்கார ஊர்தியும் கண்ணைக் கவர்ந்தது. பாண்டிச்சேரி சார்பில், களியாட்டம், கோலாட்டம், கேரள மாநிலத்தின் தையம் நடன மும் இடம் பெற்றன. சேரன் போக்குவரத்து அலங்கார ஊர்தி யுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

நிகழ்ச்சி நிறைவுபெற்றதற்கு அடையாளமாக, மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பல வண்ணப் பலூன்களை வானில் பறக்க விட்டனர்.

## திண்டுக்கல் அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள்

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம், 1991-92-ஆம் ஆண்டில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 200 நபர்கள் பயன்பெறும் வகையில் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தையல் மற்றும் எம்பிராயிடிங் இரண்டு சக்கர வண்டி பழுது பார்த்தல் மற்றும் வயரிங் போன்ற தொழில்களுக்குப் பயிற்சி அளித்திட ஆறு மாதத்திற்குத் தலா ரூ.250 வீதம் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கும் பொருட்டு ரூ.1,30.0 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 50 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

ஆயில் எஞ்சின் வழங்கும் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு 10 நபர்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 8 நபர்களுக்கு ஆயில் எஞ்சின் ரூ.40 இலட்சம் மதிப்பில் வழங்கப் பட்டுள்ளது.

இரட்டை மாட்டு டயர் வண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 60 நபர்களுக்கு ரூ.3 இலட்சம் நிதி அளிக்கப்பட்டிருந்தது. இதில் 60 நபர்களுக்கு இரட்டை மாட்டு டயர் வண்டிகள் ரூ.3 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு விட்டது.

நடப்பு நிதியாண்டில், உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 25 நபர்களுக்கு ரூ.612 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 25 நபர்களுக்கு ரூ.612 இலட்சம் மதிப்பில் உழவு மாடுகள் வழங்கப்பட்டு விட்டன.

125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டி வழங்கிட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டிகள் வழங்கப்பட்டு விட்டன.

வேளாண்மைப் பயிற்சிகளுக்கு மருந்து தெளிக்கும் வகையில் மிதி வண்டி மற்றும் விசைத் தெளிப்பான் வழங்கும் திட்டத்தின்கீழ், 5 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 நபர்களுக்கு மதிவண்டி மற்றும் விசைத் தெளிப்பான் ரூ.10 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுவிட்டது.

ஸ்டீல் பங்க் கடை, அத்தொழிலுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 15 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.6750 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளதில், இதுவரை 8 நபர்களுக்கு ரூ.36 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.


தனி நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தில் 147 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது.

## பிறப்புச் சான்றிதழ் விரைவில் கிடைத்திட...

''சென்னை மாநகராட்சியின் மண்டல மற்றும் கோட்ட அலுவலகங்களிலிருந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் காலதாமதமாகிறது எனப் பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் வந்ததையடுத்து, மாநகராட்சி இச்சான்றிதழ்களை வழங்கும் முறையினை சற்று மாற்றிக் காலதாமதமின்றி விரைவில் வழங்க முடிவு செய்துள்ளது. தற்போது பிறப்புச் சான்றிதழ்களுக்கு மனுச் செய்த ஒருவாரக் காலத்தில் சான்றிதழ்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

''மேலும் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கும் தருணமாதலால்தன்னார்வம் மிக்கவர்களைக் கொண்டு விரைவில் சான்றிதழ்கள் வழங்க உதவும் பொருட்டு மண்டல அலுவலகங்களில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் பிரிவில் கூடுதலாக உதவியாளர்களை மாநகராட்சி தற்காலிகமாக நியமித்துள்ளது.

''ஆகையால் பொதுமக்கள் கடைசிவரை காத்திராமல் உடனே பிறப்புச் சான்றிதழ் வழங்க மனுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன் மூலம் நெரிசலைத் தவிர்த்து ஒரே சமயத்தில் மனுக்கள் குவிந்து அதனால் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும், பொதுமக்களுக்குப் பிறப்புச் சான்றிதழும் விரைவில் கிடைக்கும். எனவே, பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்'' என்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கா. அலாவுதீன் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.



# நூல் நயம்

### ஆட்சித் தமிழ்

**ஆசிரியர்: டாக்டர் த. பெரியாண்டவன்**

**வெளியீடு:**

வளர் தமிழ் பதிப்பகம்,
40, அஞ்சுகம் நகர்,
சென்னை-600 005.

பக்கம்: 295 விலை: ரூ.75/-

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என விரிந்தும் இணைந்தும், உடன் பட்டும் ஒன்றியும் முத்தமிழ் எனப் பெயர் பெற்றுப் பெருமை பெற்று, தமிழ் இனத் திற்குப் பெருமை சேர்க்கும் தமிழ் மொழிக்கு 'ஆட்சித் தமிழ்' எனும் அழகிய பெயரோடு அரியதோர் அணி கலனை ஆக்கித் தந்துள்ளார், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் பெரியாண்டவன். அவரது அரிய ஆய் வின் பயனாக அவருக்கு முனைவர் பட்டத்தினை ஈட்டித்தந்த எழில்மிக்க நூலாகவும் இது திகழ்கிறது.

ஆய்வுக் கருத்துக்களை அளித்ததோடு நில்லாது, அரசுப் பணியாளர்கள் அன்றாடம் பயன்படுத்தும் படிவங்கள், வரைவுகள், குறிப்புகள் ஆகியவற்றையும் இணைப்பாக அளித்திருப்பது பாராட்டத் தக்கது மட்டுமல்ல; மிகவும் பயன்படத் தக்கது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சிமொழி யைச் செயற்படுத்தும் பணிகளோடு தொடர்பு கொண்டிருந்த தமது பட்டறி வினைப் பயன்படுத்தி, ஆட்சித் தமிழைச் செயலாக்குவதில் தாம் கண்டறிந்த சிக்கல் களையும், அவற்றைக் களையும் நெறி முறைகளையும் இந்நாலில் ஆசிரியர் விரி வாக விளக்கியுள்ளார்.

தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத் தையும் வளர்க்கவும் காக்கவும் சங்ககாலம் முதல் மதுரையில் அமைக்கப்பட்ட மூன்று தமிழ்ச் சங்கங்கள், நான்காம் தமிழ்ச் சங்கம், தஞ்சைக் கரந்தையில் உமா மகேசுவரனார் தோற்றுவித்த கரந்தைத் தமிழ்ச் சங்கம், நாகைத் தமிழ்ச் சங்கம், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் எனப் பல வேறு தமிழ்ச் சங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் பணிகளையும் இந்நூல் விவரிக்கிறது.

தமிழ் வளர்ச்சி இயக்கம் வளர தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டமும், அதன் பின்னர் தமிழ் வளர்ச்சித்துறை யின் வளர்ச்சி பற்றிய அனைத்து வரலாற்றுக் குறிப்புகளும் நூலில் விரி வாகத் தரப்பட்டுள்ளன. தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்ற முற் படும் போது ஏற்படுகிற சில சிக்கல் களைச் சுட்டிக்காட்டி அதற்குரிய தீர்வு களையும் ஆசிரியர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

அத்துடன் அரசின் கடிதங்கள், ஆணைகள், விண்ணப்பப் படிவங்கள் போன்றவை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நூலில் பல வேறு படிவங்களையும் வரைவுகளையும் தந்துள்ளார். நேர்காணல், நியமனம், பணிவரன்முறை செய்தல், தகுதிகாண் பருவம் முடித்தல், நியமனம் போன்ற பல வற்றுக்கான வரைவுகள் படிவங்கள் பலவற்றுடன் பொது வருங்கால வைப்பு நிதி, பகுதி இறுதித் தொகை பெறுதல், விண்ணப்பம் போன்றவற்றையும் தந் துள்ளார்.

இவ்வாறு பலவகையிலும் பயன்படுவ தாக இந்நூல் அமைந்துள்ளது.

—சி.ந.

### ஜீவகாருண்ய ஒழுக்கம்

**ஆசிரியர்: இராமலிங்க அடிகளார்.**

**வெளியீடு:**

காந்திய இலக்கிய சங்கம்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625 020.

பக்கம்: 64 விலை: ரூ.6/-

வாடிய பயிரைக் கண்டபொழுது எல்லாம் வாடிய வள்ளல் பெருமான் எழுதிய சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம் அவரின் தத்துவத்தின் மூலக் கூறுகளைக் கொண்டதாகும். இந்நூல் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். அண்ணல் காந்தியடிகளின் 'ஹிந்து சுயராஜ்யம்' நூலும் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். காந்தியடிகள் அகிம்சைக் கொள்கைக்கு விளக்கம் தரும் வகையில் முன்னோடியாக வந்த நூல் 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' அகிம்சைக் கொள் கையில் ஈடுபாடுடைய அனைவரும் படிக்க வேண்டிய நன்னூல் இந்நூல்.

—மாமூலன்

### பாரதிதாசன் கவிதைகள்

**வெளியீடு:**

வசந்தா பப்ளிகேஷன்ஸ்,
34, பெரிய தெரு,
சென்னை-5.

பக்கம்: 289 விலை: ரூ.16/-

புரட்சிக்கவி, பாவேந்தர் என்றெல் லாம் போற்றிப் புகழப்படும் பாரதி தாசனின் கவிதைகள், கால காலத்துக்கும் நிற்கும் கருத்துக் குவியல்கள், காலக் கண்ணாடிகள்.

இரண்டு தொகுதிகள் இணைந்த கவிதைகள் தொகுப்பாக இது வெளி வந்துள்ளது. கண்ணைக் கவரும் வண்ண முகப்பு; கையடக்கப் பதிப்பு; இடை யிடையே எண்ண இன்பமூட்டும் எழி லோவியம், இதன் சிறப்பு. அத்தனைக்கும் கை கொடுக்கிறது அழகிய அச்சமைப்பு.

எல்லாவற்றுக்கும் மேலாக குறைந்த விலையில் - மலிவு விலையில் இந் நூலைத் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

எத்தனை தடவை படித்தாலும் தெகட்டாத தெள்ளமுதாய் விளங்கும் இந்நூலைப் பெரியவர் சிறியவர் என்று எல்லாத் திறத்தாரும் படித்துப் படித்துச் சுவைக்கலாமே!

தமிழ் நெஞ்சங்களில் பதிக்கத்தக்க கவிதைகள். படித்துப் பயன் பெறலாம்.

### எம்.ஜி.ஆர். கதை

**(இரண்டு தொகுதிகள்)**

**ஆசிரியர்: எஸ். விஜயன்**

**வெளியீடு:**

அருள்மொழிப் பதிப்பகம்
32/20 ராணி அண்ணா நகர்
கே.கே. நகர், சென்னை-78.

பக்கம்: (ஒவ்வொரு தொகுதியும் 192 கொண்டது)


விலை: (ஒவ்வொரு தொகுதியும் ரூ.15/-)

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் அற்புத நூல்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கலை, அரசியல் தொண்டுகள் முதலானவை அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எண்ணம் கவரும் வண்ண முகப்புடன், இடையிடையே அரிய புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாருமே படித்துப் பயன்பெறவும், வாழ்க்கையில் முன்னேறவும் இந்நூல் ஒரு முழுமையான வழிகாட்டியாக விளங்குகிறது என்று கூறலாம்.

—பி.வி.கிரி




# குழந்தை நலம்

உலகில் உள்ள மற்ற எல்லா நாடுகளைவும்விட இந்தியாவில் மட்டுமே குழந்தைகள் மரணம் அதிக அளவில் உள்ளது.

இது தற்போது குறைந்து வரு கிறது என்றாலும், குழந்தைகள் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்து விடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதற்கு முக்கிய காரணம், மக் களின் அறியாமை, போதிய கல்வி வசதிகள் இல்லாததால் மழலைகள் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாமை... மழலையர்க்குத் தரமான பொருள் களை அளிக்காமல் இருப்பது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு இவைகள் பற்றித் தெரியாமல் இருப்பது ஆகிய வையாகும்.

இவைகளைக் கருத்தில் கொண்டே இந்தியத் தர நிர்ணய அமைவனம், குழந்தைகளுக்கான பொருள்களுக்குத் தர நியமங்களை வரையறுத்த தோடு ஐஎஸ்ஐ தர முத்திரைச் சான்றிதழ்த் திட்டத்தினையும் கொண்டு வந்துள்ளது. அவை:

1. குழந்தை உணவு, 2. குழந் தைகள் குளியல் சோப்பு, 3. பேபி இன்குபேட்டர்கள், 4. குழந்தைகள் எடை பார்க்கும் கருவிகள், 5. குழந்தைகள் பவுடர், 6. குழந்தைகள் மருத்துவமனைக் கட்டில்கள், 7. நம்பகமான, பாதுகாப்பான விளை யாட்டுப் பொருட்கள்.

இன்குபேட்டர் என்பது பற்றி நம் அனைவருக்கும் தெரியும். உரிய காலத்துக்கு முன்பே பிறந்திடும் சிசுக்களைப் பத்திரமாகப் பாது காக்கும் சாதனம் இவைகளின் செயல்திறன், பத்திரத் தன்மை, மற்றும் மின்சாரத்தால் கதகதப்பூட்டக் கூடியனவாக மருத்துவ வல்லுநர் களின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை சரி யான முறையில் வடிவமைக்கப்படா விட்டால், மழலையர் உயிருக்கே பாதகம் விளையலாம். இதைக் கருத் தில் கொண்டே ஐ.எஸ்.3120 - 1978 என்னும் தர நியமத்தினை அமைவனம் உருவாக்கி, மழலையர் இன்குபேட்டர் தயாரிப்பாளர் களுக்கு உதவி செய்கிறது.

ஐஎஸ்:5337 - 1969 என்னும் இந்தியத் தரநியமம் மருத்துவமனை யில் குழந்தைகளுக்கான கட்டில்கள் பற்றி அதாவது இவ்வகைக் கட்டில்கள் உறுதியாகவும், மழலையர் சௌகரி யமாகவும் இருக்கும்படி வடிவமைக் கப்பட வேண்டியதன் அவசியத்தை யும் கூறுகிறது.

**சத்தான மழலையர் உணவு**

மழலையர்க்குச் சத்தான முதல் உணவு தாய்ப்பால் தான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அது உலகெங்கும் ஒப்புக் கொள்ளப் பட்ட கருத்தாகும். தாய்ப்பால் மட்டுமே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை முழுமையாக அளிக்க முடியும். ஒருக்கால் தாய்ப் பால் கிடைக்காவிடில் செயற்கைக் குழந்தைகள் உணவு தேவைப்படு கிறது.

இப்படிப்பட்ட செயற்கை உணவு, குழந்தைகள் நலமாகவும், ஒழுங்காக வும், சீராகவும் வளர்ச்சி பெற ஊட்டம் நிறைந்ததாக, கலப்படமில் லாமலும் இருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டே

ஐஎஸ்:1547 என்னும் குழந்தைகள் உணவு பற்றியும் ஐஎஸ்:11156 என்னும் தர நியமங்களையும் உரு வாக்கியுள்ளது.

தாய்ப்பாலில் காணப்படும் தாதுப் பொருள்களுக்குச் சமமாகப் பால் புரதம், பால் கொழுப்பு மற்றும் தேவையான வைட்டமின் ஏ,டி இவைகளைச் செயற்கை உண வில் உள்ளடக்கியதாக இருக்க இந்தத் தர நியமங்கள் அமைந்துள்ளன. இந்தத் தர நியமங்களின்படி குழந் தைகள் உணவு தயாரிக்கப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டால் அது ஒரு முழுமையான உணவாக, தாய்ப்பாலுக்கு ஈடானதாகக் கருதப் படும்.

குழந்தைகள் பால் பவுடர் ஐஎஸ்ஐ தர முத்திரையுடன் கடை களில் கிடைக்கிறது. இவைகளை வாங்கி உபயோகித்தால், மழலையர் பாதுகாப்பு நிச்சயம்.

திரவ உணவில் ஆரம்பித்து நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாகத் திட உணவும் குழந் தைகளுக்குக் கொடுக்கப்பட வேண் டும். புரத உணவுகள் குழந்தைகள் நன்றாகச் செயல்பட உதவுகின்றன. நான்கு மாதத்திலிருந்து புரத உண வைக் குழந்தைகளுக்குக் கொடுக்க ஆரம்பிக்கலாம். குழந்தைகளுக்கு எட்டு மாதம் ஆகும்போது பால் உணவு பாதி, புரத உணவு பாதி என்ற விகிதாச்சாரத்தில் அமையும் படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு சிறப்பு அரசிதழ் அறிக்கையின் மூலம் குழந்தை உணவுகளாகிய பால், பதப்படுத்தப்பட்ட தானிய வகைகள் தயாரிப்பைக் கட்டாய ஐஎஸ்ஐ தர முத்திரைத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. ஐஎஸ்ஐ தர முத்திரை பெறாமல் மழலையர் உணவு வகை களைத் தயாரிப்பதோ விற்பதோ சட்டப்படிக் குற்றமாகும்.

**பீடிங் பாட்டில்கள்...**

இவ்வகைப் பாட்டில்கள் சுலப மாகச் சுத்தப்படுத்தும்படியும் ஸ்டெரிலைஸ் என்னும் கொதிநீரில் கழுவிச் சுத்தப்படுத்தும் வகையில் அமைந்திருத்தல் அவசியம். தவிர பீடிங் பாட்டில் ரப்பர்கள் பாட்டில் களில் சரியாகப் பொருந்தியிருக்கும்

**• உலகிலேயே இந்தியாவில்தான் குழந்தைகள் மரணம் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் மக்களின் அறியாமையே. போதிய கல்வி இல்லாததால், குழந்தை வளர்ப்புப் பற்றி தெரியாதது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி தெரியாதது ஆகியவை காரணம். இதைக் கருத்தில் கொண்டு, குழந்தை களுக்கான உணவு, குளியல் சோப், எடைபார்க்கும் கருவி, தொட்டில், இன்குபேட்டர், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு 'ஐ.எஸ்.ஐ.' தர முத்திரைச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தினை இந்தியத் தர நிர்ணய அமைப்பு கொண்டு வந்துள்ளது.**

படியும் கசிவு ஏற்படாதவாறும் இருத்தல் அவசியம். இதைக் கருத் தில் கொண்டே அமைவனம் ஐஎஸ்:5168 என்னும் தர நிய மத்தை உருவாக்கியுள்ளது. இத்தர நியமம் பீடிங் பாட்டில்களின் வடிவ மைப்பு மூலப் பொருள், கொள் ளளவு, நீள அகலங்கள், நேர்த்தித் திறன், மற்றும் அளவைகளைக் குறிப்பதாக அமைந்திருக்க வேண்டி யதன் அவசியத்தைத் துல்லியமாக விளக்குகின்றது.

பீடிங் பாட்டில் ரப்பர்களில் அபாயகரமான தொத்து நோய்க் கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இதற்காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்:3565 என்னும் இந்தியத் தர நியமம்.

**எடை பார்க்கும் கருவி**

ஐஎஸ்:2849 என்னும் தர நியமம் மழலையரின் எடை பார்க்க வென்றே உருவாக்கப்பட்ட தர நியமம்.

**பொதுச் சுகாதாரம்**

பெரியவர்களைவிட குழந்தை களின் உடல் மிக மிருதுத்தன்மை வாய்ந்தது. அதனால் எரிச்சலோ, பாக்டீரியாக்கள் சுலபமாக உட்புகு வதோ சுலபம். இவைகளைக் கருத் தில் கொண்டே குழந்தைச் சாத னங்கள் தயாரித்தல் அவசியம்.

**சுத்தம்**

குழந்தைகளைச் சுத்தமாக வைத் திருக்க உதவுவதில் குழந்தைகள் சோப்பு மிகமுக்கியமானது.

ஐஎஸ்:10523 என்ற தரநியமம் எப்படிப்பட்ட மூலப்பொருட்களை எந்தெந்த விகிதங்களில் கொண்டு சோப்பு தயாரிக்கலாம் என்பதைச் சொல்லுகின்றது.

**பேபி டால்கம் பவுடர்கள்**


அதிகப்படியான ஈரத்தினின் றும், தூசி தும்புகளிலிருந்தும் குழந் தைகளைக் காப்பது பேபி டால்கம் பவுடர்கள். இதற்காக உருவாக்கப் பட்ட தரநியமம் ஐஎஸ்:5339, குழந்தைகள் டால்கம் பவுடரில் போரிக் ஆசிட் சேர்க்கக் கூடாது.

**உடைத் தேர்வுகள்**

ஐஎஸ்: 10015 (பார்ட் 4) என்னும் தரநியமம் குழந்தைகளுக் கான சரியான அளவிலான துணிகள், வெளியுடைகள், துணிகள் தேர்வு பற்றி விவரிக்கின்றன.


**விளையாட்டுச் சாதனங்கள்**

பொம்மைகள் குழந்தைகளுக்கு வெறும் விளையாட்டுச் சாதனம் மட்டுமல்லாமல் உடல், மன வளர்ச் சிக்கும் உறுதுணை புரிகிறது. சரி யாகக் கவனம் எடுத்து பொம்மைகள் தயாரிக்கப்படாவிடில் பொம்மைகள் குழந்தைகளுக்கு ஆபத்தை விளை விக்கலாம். பொம்மைகள், கூரான முனைகளை உடையதாகவோ, கத்தி போன்ற ஓரங்களைக் கொண்ட தாகவோ இருக்கக் கூடாது. இதற் காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்: 9873 மற்றும் ஐஎஸ்:9849 இது வெவ்வேறு வயதுக் குழந்தை களுக்கான பொம்மைகள் தேர்வு செய்யும் முறை பற்றி விளக்குகின் றன.



மேலே சொன்னவைகள் சில உதார ணங்களே. மழலையர் பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவர்கள் மனம், உடல் வளர்ச்சி பெற பாடுபட்டு வருங்காலத்தில் வளமான இந்தி யாவை உருவாக்கிட இன்றைய பெற்றோரும் மேலே கூறிய வழி முறைகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.

மாணவர் பக்கம்:



## நூலகம்

—பாப்பித்தன்

இருக்கும் அறிவைப் பெருக்கி — அறிஞர்
இதயம் காட்டும் நூலகம்!
விரும்பும் துறையில் வளர்த்தே - நம்மை
வாழ வைக்கும் நூலகம்!

எழுத்(து) அறிவே இருந்தால் - போதும்
ஏணிப் படியாய் உயர்த்தியே,
அழகுப் படிப்பில், பண்பில் - சான்றோர்
ஆக்கும் நல்ல நூலகம்!

மூன்று தமிழில், பலவாம் - மொழியில்
முன்னேற் றிடுமாம் நூலகம்!
ஈன்ற நாட்டின், மொழியின்-பற்றை
இனிதா யூட்டும் நூலகம்!


ஏட்டுச் சுரைக்காய் கறிக்கும் - உதவா
தென்ற மொழியை நீக்கியே!
காட்டித் தொழிலைக் கற்க - வைக்கக்
காத்து நிற்கும் நூலகம்!

கண்ணி யத்தைக் கட்டுப் - பாட்டைக்
கடமை தன்னை உணர்த்தியே,
எண்ணும் குறிக்கோள் சிறந்து - விளங்க
எல்லாம் புரியும் நூலகம்!

ஓய்வு நேரப் பொழுதைப் - பயனாய்
ஓட வைக்கும் நூலகம்!
வாய்ப்பு வந்த போதில் - கற்றே
வருவோம் நாளும் நூலகம்!

## உலக அதிசயம்:

உலக அதிசயங்கள் பல. அவற்றுள் ஒன்று பாரோசுக் கலங்கரை விளக்கம். இது பாரோசு என்னும் தீவில் உள்ளது; 500 அடிகள் உயரம் கொண்டது.



பாரோசுக்
கலங்கரை விளக்கம்

## அறிவுச்சுடர்

1. லண்டன் அமைந்துள்ள நதிக் கரையின் பெயர் என்ன?
   தேம்ஸ்.

2. தமிழ்நாட்டில் தேசிய பூங்கா எங்கு உள்ளது?
   சென்னை கிண்டியில்

3. நேரத்தை துல்லியமாக அளக்க கப்பலில் வைக்கப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?
   'ஈடியோமீட்டர்'.

4. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபகர் யார்?
   ஏ.ஓ. ஹியும்.

5. மாஸ்கோ ஒலிம்பிக் ஹாக்கியில் வென்ற நாடு எது?
   'இந்தியா'

6. மின்சாரம் சேமித்து வைக்கும் கருவி எது?
   பாட்டரி

7. சென்னை நகரின் முதன் பெண் மேயர் யார்?
   திருமதி தாரா செரியன்

8. தாய்லாந்தின் தலைநகர் யாது?
   பேங்காக்

9. ஆடு தொடாவிலிருந்து கிடைக்கும் மருந்து யாது?
   வாசிகா

10. தையல் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
    எலிய எஸ். ஹோல்.

11. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
    சென்னை

12. ஒரிஸ்ஸாவின் தலைநகர் எது?
    புவனேஸ்வர்

ம. சந்தானம்
ஸ்ரீ லெட்சுமி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்
திருப்புவனம் 623 611
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.



# விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்

வனவிலங்குகளின் வாழ்க்கையை ஆராயச் சென்ற விலங்கியல் நிபுணர்களுக்கு ஒரு வியப்பூட்டும் செய்தி கிடைத்தது. விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்; விலங்குளிலும் டாக்டர்கள் உண்டு என்பதே அது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தான்சானியாவிலுள்ள மாகாலி மலை தேசியப் பூங்காவில் ஒரு சிம்பன்சி குரங்கு நோய் வாய்ப்பட்டது. இருந்த இடத்திலிருந்து நகரக் கூட முடியாமல் தவித்த அந்த சிம்பன்சி, அருகிலுள்ள செடி, கொடிகளைச் சாப்பிடாமல் மிகவும் சிரமப்பட்டு சிறிது தொலைவு சென்று ஒரு குறிப்பிட்ட தாவரத்தைப் பறித்து அதன் சாற்றை மட்டும் மென்று குடித்துவிட்டு சக்கையை வெளியே துப்பியது 'வெரோனிகா அமைக்டாலினா' (Veronica Amygdalina) என்ற தாவரவியல் பெயர் கொண்ட அந்தச் செடியை சாதாரணமாக சிம்பன்சி குரங்குகள் தொடவே தொடாது.

மறுநாள் அதே குரங்கைக் கவனித்தபோது அது நோய் குணமாகி வழக்கமான 'குரங்குச் சேட்டைகளில்' ஈடுபட்டது. இந்தச் சம்பவத்தைக் கண்ட நிபுணர்கள் வியப்படைந்து. சிம்பன்சி குரங்குகளின் மருத்துவ அறிவு பற்றி ஆராய்ந்தனர். குறிப்பிட்ட குரங்கு பயன்படுத்திய 'வெரோனிகா' தாவரத்தை தான்சானிய மக்களும் வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்காக நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருவது தெரிய வந்தது. இந்த மூலிகை மருத்துவத்தை அவர்கள் விலங்குகளிடமிருந்துதான் கற்றார்கள் போலும்!

1987-ஆம் ஆண்டில் ஜப்பானின் கியோட்டோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மைக்கேல் ஹஃப் மேன் (Michael Huffman) இந்தச் செய்தியை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக குரங்குகளை ஆராயும் நிபுணர்கள், குரங்குகள் பயன்படுத்தும் 15 மூலிகைகளைக் கண்டறிந்தார்கள். வேறு சில விலங்குகளைக் கண்காணித்தபோது அவைகளும் இப்படி மூலிகைகளைப் பயன்படுத்துவது தெரிய வந்தது.

ஆண்டுதோறும் நடைபெறும் அமெரிக்க அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் மாநாட்டில் விலங்குகளின் மருத்துவ அறிவு குறித்து தனியாக ஒரு கருத்தரங்கே நடந்தது. ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ரிச்சர்டு ராங்கம் (Richard Wrangham) வேறொரு தகவலைத் தெரிவித்தார்.

சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த 'ஆஸ்பிலியா' (Aspilia) என்னும் தாவரத்தைத் சாப்பிட சிம்பன்சி குரங்குகள் 20 நிமிடம் வரை நடந்து வேறு இடங்களுக்குச் செல்வதைக் கண்டார். நாம் குழந்தைகளுக்கு வேப்பெண்ணெய், மீனெண்ணெய் கொடுப்பதைப் போல குரங்குகள் இந்த தாவரத்தின் எண்ணெயைக் கசக்கிப் பிழிந்து மூக்கிலும் வாயிலும் தடவிக் கொள்கின்றன. குரங்குகள் ஏன் இப்படிச் செய்கின்றன என்று அந்த தாவரத்தின் எண்ணெய்யை ஆராய்ந்த போது அதில் 'தயாருப்ரின்-ஏ' (Thiarubrine-A) என்னும் ரசாயனப் பொருள் இருப்பதும், அது பூச்சிகளையும், கிருமிகளையும் கொன்றுவிடும் தன்மைபடைத்தது என்பதும் தெரியவந்தது. அதை மேலும் ஆராய்ந்ததில் புற்றுநோய் ஏற்பட்ட செல்களைக் கூட அழிக்கும் சக்தி அவற்றுக்கு இருந்தது தெரியவந்தது. முதல் தடவையாக மனிதன், விலங்குகள் மூலம் ஒரு அரிய மருந்தை கண்டறிந்திருக்கிறான் என்று கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் இலாய் ரோட்ரிகஸ் (Eloy Rodriguez) கூறினார்.

### கரடி கற்றுக்கொடுத்த பாடம்

அமெரிக்காவில் வாழும் பழங்குடி இந்திய (செவ்விந்தியர்கள்) மக்களில் நவாஜோ இந்தியர்கள் கரடிகள் கற்றுக் கொடுத்த ஒரு மருந்தை இன்றும் பயன்படுத்திவருகின்றனர்.

வயிற்றில் புழு, பூச்சிகளினால் ஏற்படும் உபாதைகளைத் தீர்க்க லிகுஸ்டிகம் (Ligusticum) என்னும் தாவரத்தைக் கரடிகளும் செவ்விந்தியர்களும் பயன்படுத்துகின்றனர். இந்த மருத்துவத்தை மனிதர்களுக்கு கரடிகள் கற்றுக் கொடுத்த பழங்கதை ஒன்றையும் செவ்விந்தியர்கள் கூறிவருகின்றனர்.

விலங்குகளில் யானைகள், டால்ஃபின்கள் போன்றவை மனிதர்களைப் போலவே மகப்பேறு மருத்துவம் பார்ப்பதை நீண்டகாலமாகவே விலங்கியல் நிபுணர்கள் அறிவார்கள்.

பிரசவ காலத்தில், வயதான பெண் பிராணிகள் உதவிக்கு வந்து பிரசவம் பார்க்கின்றன. ஆனால், மனிதர்களுக்கு இதுவரை தெரியாத சில அரிய மருத்துவ முறைகளும் மருந்துகளும் கூட பிராணிகளுக்குத் தெரிந்திருப்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

மத்திய அமெரிக்காவிலுள்ள கோஸ்டாரீகா நாட்டின் காடுகளில் வாழும் ஊளையிடும் குரங்குகள் (Howling Monkeys) கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துகின்றன! அதுமட்டுமல்ல, ஆண்களையோ, பெண்களையோ அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளையும் தெரிந்து வைத்திருக்கின்றன.

பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ஒரு குறிப்பிட்ட தாவரத்தை ஊளையிடும் குரங்குகள் சாப்பிடுகின்றன. இப்படிச் சாப்பிடும் குரங்குகளுக்கு ஆண் குட்டிகளே அதிகம் பிறக்கின்றன.

மனிதர்கள் உள்பட எல்லா உயிரினங்களிலும், பிறக்கப்போகும் புதிய ஜீவன் ஆணா, பெண்ணா என்பதை உயிரணுவிலுள்ள 'எக்ஸ்' (X) குரோமோசோமும் (பெண்) 'ஒய்' (Y) குரோமோசோமும் (ஆண்) தீர்மானிக்கின்றன.

இவைகளில் 'எக்ஸ்' அணு அமிலத்தன்மையிலும், 'ஒய்' அணு காரத் தன்மையிலும் நன்கு தாக்குப் பிடித்து நிற்கின்றன.

கருப்பையில் அமில அல்லது காரத் தன்மையைக் கட்டுப்படுத்தும் தாவரங்களை குரங்குகள் நன்கு அறிந்திருக்கின்றன.

எஸ். சுவாமிநாதன்

நன்றி 'தினமணி'

மே-27 பண்டித நேரு
நினைவு நாள்:

# உத்தமர் நேரு

பண்டித நேரு
பண்பின் மேரு
எண்டிசை ஒளிரும்
இணையிலா ஜோதி!

அன்னை நாடு
அடிமை விலக
தன்னை ஈந்த
தவப் புதல்வர்

நாடும் வீடும்
நலமாய் விளங்கிட
பாடு பட்டவர்
பல்கலைச் செல்வர்!


எழுத்தில் பேச்சில்
எதிலும் வல்லவர்
பழுத்த மரமாய்ப்
பயனைத் தந்தவர்!


மழலைச் சிரிப்பில்
மயங்கிய மேதை
உழைப்பால் உயர்ந்த
உத்தமர் நேரு!

கடமையே மூச்சாய்
கருதிய வீரர்
மடமையை எதிர்த்த
மக்கள் தலைவர்!

நேருவின் கனவை
நனவாய் ஆக்கிடச்
சேருவோம்! பாரத
தேசம் சிறக்கவே!

—பி.வி.கிரி





# மரங்கள் நாட்டின்

மரங்கள் பூமியினைப் பசுமையாக மாற்றுகின்றன. உணவு மட்டுமல்ல; மழையினையும் கொடுக்கிறது. மருந்து, எரிசக்தி, விலங்குகளுக்கு உணவு என்று பல வழிகளில் பயன்படுகிறது. மரங்கள் மனித சமுதாயத்திற்குப் பல வகைகளிலும் உதவிபுரிகின்றன. காய், கனிகளை மட்டுமல்ல; அவை வீடுகள் கட்டவும், மரப்பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன. நாம் பயன்படுத்தும் காகிதமும், மூங்கில் போன்ற மரங்களிலிருந்து பெறுகிறோம். அதில் சந்தனம், தேவதாரு, குங்குமம், யூகலிப்டஸ் முதலியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன.

மரங்கள் தமது வாழுங் காலத்தில் பயன்படுவது மட்டுமன்றி அழிந்து மண்ணோடு மண்ணாகி மட்கிப்போன பின்னரும் நிலக்கரியாகவும், எரிஎண்ணெயாகவும், வாயுவாகவும் மாறிப் பயன் தருகின்றன. மரங்கள் மேகங்களைக் குளிர்வித்து மழையைப் பொழியச் செய்யும் அதிசயத்தைச் செய்கின்றன. மரங்கள் மட்டுமே கைம்மாறு கருதாது உயிர்களுக்குப் பயன்படுகின்றன. வருவாய்க்கு வழிவகுக்கின்றன. சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்கின்றன. நம்முடைய இயற்கையமைப்பு சிதையாமல் பாதுகாக்கின்றன.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் ஒரு மரத்தை வளர்க்க உறுதி பூண வேண்டும். வீணாக மரங்களை வெட்டுவது ஒரு சமூகவிரோதச் செயலாகக் கருதப்படவேண்டும். மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமான சூழ்நிலையில் மரங்களை வளர்த்து சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவது முக்கியமானதொன்றாகும்.

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 329 மில்லியன் எக்டர். அதில் காடுகள் 67 மில்லியன் எக்டேர். அதாவது மொத்த நிலப்பரப்பில் 22 விழுக்காடே காடாகும். 1952-இல் வகுக்கப்பட்ட தேசியக் கொள்கையின்படி குறைந்தபட்ச 33 விழுக்காடாவது காடுகள் இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும்.

சில மரங்கள் சுற்றுப்புற மாசை அகற்றப் பயன்படுகின்றன. மாமரம், காற்றில் உள்ள குளோரினையும், மல்பரி, சூரியகாந்தி, வாதா மரங்கள் சல்பர்டை ஆக்ஸைடையும், விசிறிப்பனை, அத்தி ஆகியவை ஹைட்ரஜன் ப்ளோரைடையும் அகற்ற உதவி புரிகின்றன. 50 மீட்டர் பரப்புள்ள ஒவ்வொரு பூங்காவினால் 20-30 டெசிமல் காற்றுச் சத்தத்தைக் குறைக்க முடியுமென்று டாக்டர் டி.சி. தாஸ் கணித்துள்ளார். தேசிய வனக் கொள்கையின்படி பிராணவாயு, ஈரப்பதக் கட்டுப்பாடு, பறவை, பூச்சிகள் புகலிடம், நச்சுக் காற்றைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு மரங்கள் வளர்ப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

மரங்கள் இயற்கையின் சுவாசப்பைகள்

மரங்களை இயற்கை அமைப்பின் சுவாசப்பைகள் என அழைப்பது பொருத்தமாகும். ஏனென்றால், மனிதனால் உருவாக்கப்படும் பலவகையான கழிவுப் பொருட்களை, கேடுகளைக் களைவதும் மரங்கள் தாம். மரங்கள் மெல்ல

# செல்வங்கள்!

அசைந்தசைந்து அக்கழிவுகளிலுள்ள கரியமிலவாயு, நைட்ரஜன் போன்ற வாயுக்களைப் பிரித்து வெளி மண்டலத்தில் கலந்து விண்வெளிப் பயணத்திற்கு அனுப்புகின்றன. இதனால் உயிர் இனங்களுக்கு ஏற்படும் கேடுகள் வெகுவாகத் தடுக்கப்படுகின்றன.

மட்டுமே வாயு மண்டலத்திலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு சூரிய ஒளியினால் உறிஞ்சி அவ்வாயுவினைக் கார்பனாகவும், ஆக்ஸிஜனாகவும் பிரித்து ஒளிச்சேர்க்கை வாயிலாகக் கார்பனை மாவுப் பொருளாக

எனவே, பச்சை நுரையீரல்களின் செயல், சுவாசப்பைக்கு ஏதேனும் ஊறு விளைந்தால் உயிர்க்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல மரங்கள் அழிக்கப்பட்டால் மனித

எலித்தடுப்பான்களாகச் செயல்பட்டு எலியின் நாச விளைவுகளிலிருந்து காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தனியே நுரையீரல்கள் உண்டு. ஆனால் அத்துணை உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான ஒரே நுரையீரல் மரங்களிடையேதான் உள்ளது. கரியமில வாயுவினைக் கிரகித்துக்கொண்டு நமது சுவாசத்திற்கு வேண்டிய பிராண வாயுவை அளிக்கிறது. மேலும் நச்சுப்புகைகளை உள்ளீர்த்துக்கொள்கிறது. மனிதன் ஒரு நாளைக்கு 12,000 லிட்டர் முதல் 15,000 லிட்டர் வரைக் காற்றைச் சுவாசிக்கிறான். இந்த நிலையில் நம்மைச் சுற்றி வியாபித்துள்ள சுற்றுப்புறக் காற்றில் பிராண வாயுவை நிரப்பிய வண்ணம் இருக்கின்றன மரமென்னும் பைகள். மரங்கள் என்றாலே உடனே நினைவுக்கு வருவது அவற்றின் குளிர்ந்த நிழலும் சுகமளிக்கும் காற்றுமாகும்.

மரம் விடும் மூச்சால் மனிதன் மட்டுமன்றி உயிருள்ள பிற ஜீவராசிகளும் பயன்பெறுகின்றன. மரங்களைத் தவிர மற்ற உயிரினங்கள்யாவும் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவினைத்தான் வெளிவிடுகின்றன. மரங்கள் தாம் இதற்கு விதிவிலக்கு. மரங்கள்

மாற்றுகின்றன. இவ்வமயம் வெளிவிடும் ஆக்ஸிஜன்தான் ஏனைய உயிர்கள் சுவாசித்து வாழ வழி வகுக்கின்றது. மரங்களின் பச்சை இலைகள் ஒரு சோதனைக் கூடமாகவே செயல்பட்டு ஒளிச்சேர்க்கையின்போது ஆக்ஸிஜனை வெளியேற்றுகின்றன.



உயிர்களும், மற்ற உயிர்களும் வாழும் இந்த இயற்கைச் சூழல் மாசுற்று அழிய நேரிடும் என்பது உறுதியாகும்.

50 ஆண்டு வாழும் ஒரு மரம் ஆயுட்காலத்தில் 18 இலட்சம் ரூபாய் பெறுமான சேவை புரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஐயாயிரம் ரூபாய் பெறுமான பிராண வாயுவை வெளியிடுகிறது. 5 இலட்சம் ரூபாய் காற்றைச் சுத்திகரிக்கும் செயலில் ஈடுபடுகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

மரங்கள் மனித இனத்தின் இதயமாக, இயற்கையின் நுரையீரலாக, பிராணவாயுவின் பிறப்பிடமாக விளங்குகின்றன. பலவற்றாலும் உதவிவரும் நமது நண்பர்கள் மரங்கள். அவைகளை அழிப்பதால் நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்கிறோம். மரத்தை வெட்டுவது ஒரு உயிரைப் பறிப்பது போன்றதாகும். மகவுக்கு ஒரு மரம் நட்டு, நீர், நிலம், காற்றின் தூய்மை, வளமான வாழ்வின் மேன்மை என உணர்ந்து போர் வேகத்தில் செயல்படுவோம்! மண் வளம் பெறுவோம்!

இத்தகைய மகத்தான சேவை புரியும் மரத்தினை நட்டு பயிரினம் செழிக்கவும், மழைவளம் பெருகவும், மண் வளம் ஓங்கவும் பேருதவிபுரியும் மரங்களை நாட்டு வளங்களாகக் கொண்டு காப்போம்.

\- என். ரெங்கநாதன்
நன்றி: 'திட்டம்'

# கால்நடைகள் மூலம் மனிதனுக்குப் பரவக்கூடிய நோய்கள்

**(RABIES) வெறிநோய்**

வெறி நோய் ஒருவகை (வைரஸ்) நுண்கிருமியால் ஏற்படுகிறது. மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் பரவக்கூடிய கொடிய நோயாகும். விலங்குகளிட மிருந்து மனிதனுக்கும், ஓர் விலங்கிட மிருந்து மற்ற விலங்குகளுக்கும் எளிதில் பரவக் கூடியது.

**நோயால் பாதிக்கப்படும் விலங்குகள்:**

நாய், பூனை, பசுவினம், எருமை யினம், ஆட்டினம், காட்டு விலங்கு களான நரி, யானை, வௌவால்.

**நோய் பரவும் விதம்:**

ஓர் விலங்கு மற்ற விலங்குகளைக் கடிக்கும்போது உமிழ் நீர் மூலமாக இந்த நோய் பரவுகிறது. காயங்களின் மீது கிருமியுடன் கூடிய உமிழ்நீர் படுதல்.

**நோய் அறிகுறிகள்:**

அ. நாய் அங்குமிங்கும் அலைதல்
1. வாயிலிருந்து அதிக உமிழ்நீர் வடிதல்
2. தாடை தொங்குதல்
3. மரம், கல் மற்ற பொருட்களைக் கடித்தல், பிற விலங்குகள் மனிதனைக் கடித்தல், வெளிச்சத்தைக் கண்டு பயப் படுதல்.

**ஆ. பசுவினம்**
1. முரட்டுத்தனமாக இருத்தல்
2. வித்தியாசமான குரலில் கத்துவது
3. அடிக்கடி சிறுநீர் கழிப்பது

**சிகிச்சை முறை:**

1. நோய் அறிகுறி தோன்றிய பிறகு சிகிச்சை பலனளிக்காது
2. கடிபட்ட இடத்தை சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல்
3. வெறிநோய்த் தடுப்பு ஊசி மருந்து போடுதல்

**நோய்த் தடுப்பு முறைகள்:**

வருமுன் காப்பது நல்லது. எல்லா இனச் செல்லப் பிராணிகளுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை தடுப்பு ஊசி போடுதல்.

உதாரணமாக BPL தடுப்பு மருந்து, Chick Embryo தடுப்பு மருந்து

**மனிதர்களுக்கு:**

அ. உடனடியாக மருத்துவர் ஆலோசனை யும் தடுப்பு ஊசி போடுதலும்
1. BPL தடுப்பு மருந்து
2. Human Diploid Cell Culture தடுப்பு மருந்து
3. Chick Embryo தடுப்பு மருந்து

ஆ. கடிபட்ட இடத்தைச் சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல், கிருமி நாசினிகள் உபயோகிக்கக் கூடாது.

**(BRUCELLOSIS) கருச்சிதைவு நோய்**

கருச்சிதைவு நோய் ஒருவகை பாக்டீரியா கிருமியால் ஏற்படுகிறது. இந்த நோய் பசு, எருமை, ஆடுகள் பன்றி களைத் தாக்குகிறது. இந்த நோய் மனி தனையும் தாக்கவல்லது. எளிதில் பரவும் தன்மையுடையது.

**பாதிக்கப்படும் கால்நடைகள்:**

பசுக்கள், எருமைகள் 5-6 மாதம் சினைப் பருவத்தில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றன. ஆடுகள் மற்றும் பன்றிகளும் இந்த நோயினால் பாதிக்கப் படுகின்றன.

**நோய் பரவும் விதம்:**

அ. கருச்சிதைவு ஏற்பட்ட பசுக்கள் மற்ற கால்நடைகள் உறுப்புகளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருட்கள் மூல மாக மற்ற கால்நடைகளுக்குப் பரவுகிறது.

ஆ. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட காளைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்வதால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது.

**நோய் அறிகுறிகள்:**

பசு மற்றும் எருமையினங்களில் 5-6 மாத சினைப் பருவத்தில் கருச்சிதைவு ஏற்படுதல் அதேபோல் ஆட்டினம் மற்றும் பன்றியினத்தில் கருச்சிதைவு ஏற்படுதல்.

**சிகிச்சை முறை:**

அ. கருச்சிதைவு நோயினால் பாதிக் கப்பட்ட கால்நடைகளைத் தனியாக பிரித்து வைத்தல்

ஆ. 3 மாதங்கள் வரை சினைக்கு விடாமல் ஓய்வு கொடுத்தல்

**நோய்த் தடுப்பு முறைகள்:**

அ. மந்தைகளில் "Brucelin" சோதனை செய்து நோய் கண்ட கால்நடைகளைப் பிரித்தல்

ஆ. இயற்கை முறைக் கருவூட்டலை தவிர்த்தல்

இ. 6 மாத வயதுடைய கிடேரிகளுக் குத் தடுப்பு ஊசி போடுதல்

ஈ. செயற்கை முறை கருவூட்டல் விந்து வுடன் ஆண்டிபயாடிக் மருந்துக்கள் கலப்பது.

உ. கருச்சிதைவுக் கழிவுப் பொருட் களைச் சுகாதாரமான முறையில் அப் புறப்படுத்துதல்

ஊ. நோய் பாதிக்கப்பட்ட கால் நடைகளுக்கு 3 மாதம் இனச் சேர்கை யிலிருந்து ஓய்வு கொடுத்தல்.

—கால்நடைப் பராமரிப்புத்துறை



காவலர் குடும்பங்கள் களிப்புற

# சிவகங்கையில் ரூ.2½ கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் தோற்றுவிக்கப் பட்டு எட்டு ஆண்டுகள் பறந்தோடி விட்டன. இம்மாவட்டத்தின் அமை திக்குப் பங்கம்வராது, பாதுகாத்து வரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுவரும் காவலர்கள் குடும் பத்துக்கு ஒரு குடியிருப்பு இல் லையே என்ற குறை... ஆயுதப் படைக்காவலர்கள் தலைநகரில் தங்கிப் பயிற்சிபெற்று அவசர நிலைக்கு உடனே செல்லமுடியாத படி, மதுரையிலேயே இத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தனர்... காவலர் பணி சிறப்புடன் அமைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், இக் குடியிருப்பைத் திறந்து உடனே காவ லர்கள் குடும்பங்கள் சிவகங்கையில் குடியேற்றிடவிரும்பி ஆணையிட்டார்.

அதன் விளைவு.....

கடந்த 2.5.1992-ஆம் நாள் சிவகங்கையில் கோலாகலமான விழா... நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. காவலர்கள் குடும்பத் தில் மகிழ்ச்சி வெள்ளம்... விழா விற்குக் காவலர்கள் தமது துணை வியார், குழந்தைச் செல்வங்களுடன் வந்து மகிழ்வோடு கலந்து கொண் டார்கள்.

விழாவிற்குத் தலைமைவகித்த மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியாகாந்தி இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றிவைத்துப் புதிய கட்டடத் திறப்புப் பணியைத் தொடங்கிவைத்தார். மண்டலக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு. எஸ்.வி. வெங்கடகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தலைமைப்பொறி யாளர் திரு. செ. மாடக்கண்ணு அவர்கள் திட்ட அறிக்கையைப் படித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு. திருநாவுக்கரசு அவர்கள் தமது திருக்கரங்களால் ரூபாய் 2½ கோடியில் கட்டப் பட்டுள்ள புதிய காவலர் குடியிருப் பைத் திறந்து வைத்தார். இம்மாவட் டத்தில் அறிவொளி இயக்கத்தில் ஓராண்டு நிறைவு வெற்றி விழா கேக்கையும் வெட்டினார். அறி வொளி இயக்கம் சார்பில் 475 கிராமப் பெண்களுக்குத் தரப்பட்ட கராத்தே பயிற்சியைப் பார்த்து, வியந்து பாராட்டிய மாண்புமிகு அமைச்சர், காவல்துறையைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்குப் பொன் னாடை அணிவித்துப் பாராட்டினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் குடியிருப்புத் திறவுகோலை வழங்கிட, அதைத் தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும் சமு தாயத்தில் நலிவடைந்த மக்களுக்கு அரசின் உதவித்தொகைகளை வழங் கினார். ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 13 இலட்சத்தில் கட்டப் பட்டுள்ள குழும வீடுகளை 77 பேருக்கும் வழங்கினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கட்டடம் ஒன்றையும், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மூன்றையும், கிராமங்களில் 244 தெருவிளக் குகள் அமைத்திட உதவித் தொகை யையும், படித்த 100 பெண்களுக் குச் செயற்கை வைரத்துக்குப் பட் டைத் தீட்டும் தொழில்புரிய ரூபாய் 18 இலட்சத்தையும், கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள் அத் தொழிலைக் கைவிட்டால் அவர்கள் மாற்றுத் தொழில்புரிய 128 நபர் களுக்கு ரூபாய் 10 இலட்சத்தையும், வறட்சி நிவாரணப்பணிகள் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூபாய் 23 இலட்சத்திற்கான நிதி உதவியையும், 7 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ரூபாய் 33 இலட்சம் மதிப்பில் கட்டப்படுவதையும், ஆக மொத்தம் ஒரு கோடி ரூபாய் மதிப் பிலான உதவிகளை இம்மாவட்ட மக்களுக்கு வழங்கினார்.

பின்பு தமது சிறப்புரையில் மாண்புமிகு அமைச்சர் பேசும்போது கூறியதாவது:-

'தமிழ்நாட்டில் உள்ள மக்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்க்க புரட்சித் தலைவி அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6½ கோடி செலவில் மக்களுக்கு அத்தியா வசியத் தேவைகளை நிறைவேற்றிப் பல திட்டங்கள் செயல்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் வரு கின்ற 3 மாதத்தில் குடிநீர்ப் பிரச் சினை ஏற்படக்கூடாது என்று கருதி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளார். மேலும் எங் கெங்குக் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதோ அந்த இடத்திற்கு அரசு அதிகாரிகள் சென்று ஆவன செய் யும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக மக்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்கிடப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறார். இதன்மூலம் இந்தியாவில் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக விளங்கும்...'

-இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில் சட்டமன்ற உறுப் பினர்கள் திரு. கரு. முருகானந்தம், திரு. வி.எம். சுப்பிரமணியம், திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், திருமதி கற்பகம் இளங்கோ, திரு. கே.ஆர். இராமசாமி, திரு. மு. தென்னவன், திரு. சுந்தர்ராஜ், திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் வாழ்த் துரை வழங்கினார்கள்.

விழா முடிவில் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தாரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வளர்ந்துவரும் இம்மாவட்டத் தலைநகருக்கு இப்புதிய குடியிருப் புகள் மெருகூட்டிப் பெருமை சேர்க் கும் என்பதும், 364 காவலர் குடும் பங்கள் நிம்மதியுடன் வசிக்க வாய்ப் பும் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.



வளரும் வேளாண்மை :

# கோடை காலத்தில் பட்டுப்புழு பராமரிப்பு

பட்டுப்புழு வளர்ப்பில் உண்டாகும் இழப்புக்கு அவ்வப்போது நிலவும் தட்பவெட்ப நிலையும் ஒரு முக்கியக் காரணம். நோய்களினால் 40-50 சதம், பூச்சிகளினால் 5-6 சதம் மற்றும் சீதோஷ்ண நிலையினால் 10-12 சதம் இழப்பும் உண்டாகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பினை 24-28 (டிகிரி சென்டிகிரேடு) வெப்ப நிலைக்குள்தான் சாதாரணமாக வளர்க்க இயலும். வெப்பநிலை 28 டிகிரி சி-ஐத் தாண்டும்போது சீதோஷ்ணம் மற்றும் அதன் காரணமாக, 'பால்புழு' போன்ற நோயும் உண்டாகி புழு வளர்ப்புத் தோல்வியடைகின்றது. எனவே, கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு விவசாயிகள் புழு வளர்ப்பினை வெற்றிகரமாகச் செயல்படுத்தலாம்.

**மின் குளிர்சாதனப்பெட்டி வைத்தல்**

★ இம்முறை மிகவும் சிறந்தது என்றாலும் அனைத்து விவசாயிகளாலும் இதைப் பின்பற்ற இயலாது மேலும் தொடர்ச்சியாக மின்சாரம் இல்லாத நிலை நமக்கு உண்டு என்பதால், இம்முறையை நாம் எப்போதும் நம்பியிருக்க இயலாது.

★ இலை சேமிக்கும் தொட்டியினைச் சாக்குப் பைகளினால் சுற்றி அதன் மேல் தண்ணீரைத் தெளித்து, இலையின் தரம் கெடாதவாறு பாதுகாக்க வேண்டும். தரமிழந்த இலைகளே நோய்க்கு முதல் காரணியாகும்.

★ ஜன்னல் மற்றும் உள்ளே திறந்த பகுதிகளில் மேற்சொன்ன முறையிலேயே, நனைந்த கோணிப் பைகளைக் கட்டி வெப்பத்தைக் குறைக்கலாம்.

★ உயரமாகக் கூரை அமைத்தால் அல்லது தென்னங்கீற்று, கோரைப் புல் மற்றும் வைக்கோல் இவற்றைக் கொண்டு கூரை அமைத்தால் வெப்பம் உள்ளே இறங்காது.

★ புழு வளர்ப்புத் தாங்கி மற்றும் இலைசேமிக்கும் தொட்டி இவற்றிற்குக் கீழே பாலிதீன் பேப்பரை விரித்து, 10 செ.மீ. உயரத்திற்கு நுண் மணல் படுக்கை அமைத்து அதன்மேல் தண்ணீரைத் தெளித்து வைக்கலாம்.

★ நல்ல காற்றோட்ட வசதி கொண்ட வளர்ப்பு அறையில் தட்பவெப்ப நிலையைப் பராமரிக்கும் முறைகளைக் கையாளுவது எளிது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

## கோடைக்கு உகந்த பயிர்

தமிழ்நாட்டில் கடலைக்கு அடுத்த முக்கியமான எண்ணெய்வித்துப் பயிர் எள். எண்ணெய் வித்துக்களுக்கு அதிக விலை கிடைக்கும் இன்றைய காலங்களில் எள்ளை ஒரு பணப்பயிர் என்றும் சொல்லலாம். மற்றொரு சிறப்பு அம்சம் இப்பயிரை குறைந்த அளவு கிணற்று நீரைக் கொண்டு பயிரிடலாம். இப்பயிரின் நீர்த்தேவை இருபத்தைந்து சென்டி மீட்டர் (நெற்பயிருக்குத் தேவையான மொத்த நீரில் ஐந்தில் ஒரு பங்கு).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பவானிசாகர் நீர் நிர்வாகப் பிரிவு நடத்திய ஆராய்ச்சியின் முடிவுப்படி, கோடையில் எள்ளிற்குக் கீழே குறிப்பிட்டது போல் பாசனமளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

★ எள் அதிக நீரைத் தாங்கி வளரக் கூடிய பயிரல்ல. அடிக்கடி நீர் பாய்ச்சக்கூடாது. நான்கு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. ஆகையால், கோடையில் குறைந்த நீர் வசதி உள்ளவர்களுக்கு உகந்த பயிர் இது.

★ முதல் பாசனம், விதைத்தவுடன் அளிக்க வேண்டும். இப்பாசனத்தைக்கொண்டு, பயிர் முளைத்து மூன்று, நான்கு இலை நிலை அடைந்துவிடும்.

★ இத்தருணத்தில் இரண்டாவது பாசனம் அளிக்க வேண்டும்.

★ மூன்றாவது பாசனம், பூக்கும் தருணத்திலும், நான்காவது காய் விளையும் தருணத்திலும் கொடுக்க வேண்டும்.

இத்துடன் கோ.1 போன்ற உயர் விளைச்சல் எள் ரகங்களைப் பயிரிட்டு கோடையில் குறைந்த அளவு பாசன வசதி உள்ளவர்கள் பயனடைய விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## வறட்சியைத் தாங்கும் தீவனப்புல்

கடந்த 14 ஆண்டுகளில் ஒன்பது புதிய நல்ல சத்துள்ள தீவனப்பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 1988-இல் வெளியிடப்பட்ட கோ.1 நீலக் கொழுக்கட்டைப் புல் வறட்சியைத் தாங்கி நன்கு வளர்ந்து நல்லதொரு தீவனத்தைக் கொடுக்கவல்லது. மேலும் மாடு மேய்ப்பதனால் உண்டாகும் மிதி பாட்டினால் செடிகள் பட்டுப்போவதில்லை. இந்த ரகப்புல் வேர்கள் பூமியில் இந்தச் சித்திரை மாதக் கடும் வெய்யிலையும் தாங்கி, சிறிது மழை கிடைத்தவுடன் துளிர்த்து நல்ல தீவனத்தை மேய்ச்சலுக்குக் கொடுக்க வல்லது. இதன் விதைப்புக் காலம் செப்டம்பர் அக்டோபர் (அதாவது வடகிழக்குப் பருவ மழைக்காலம்) இந்தப்புல் வடிகால் வசதியுள்ள ஒரு மண்பாட்டு மற்றும் சுண்ணாம்புச் சத்து மிகுந்த நிலத்தில் நன்கு வளரக்கூடியது. இதில் ஒன்பது சதம் புரதமும், நாற்பது சதம் மாவுச்சத்தும் சுமார் அரை சதம் சுண்ணாம்புச் சத்தும் கொண்டது. இதன் செரிக்கப்படும் திறன் 49 சதம் இந்த நீலக்கொழுக்கட்டைப்புல் ஆண்டிற்குச் சுமார் ஆறு அறுவடைகளில் எக்டருக்கு நாற்பது டன்கள் வரை பசுந்தீவனம் கிடைக்கும். ●

# பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான அட்டைகள்!

**காகிதத்** தொழிற்சாலைகள் காடுகளை அழித்து காகிதக் கூழாக்கி விட்டன. இதனால் நம் வனச் செல்வம் குறைந்து வருகிறது. ஆகவே, காகிதம் தயாரிக்க பிறிதொரு மூலப் பொருளைத் தேடும் நிலையில் உள்ளோம். பண்ணைக்கழிவுகளிலிருந்து காகிதம் தயார் செய்யும் நுட்பத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

**மூலப்பொருள்கள்**

செல்லுலோஸ் கொண்ட எல்லாப் பொருளிலும் காகிதம் தயாரிக்கலாம். நார்த்தன்மை அதிகம் கொண்ட பொருள்களிலிருந்து காகிதம் தயாரித்தல், நல்ல வலுவுள்ளதாகவும், தரமுள்ளதாகவும் இருக்கும். சாதாரணமாகக் காகிதக் கூழ் தயாரிக்க மூங்கில், யூக்கலிப்டஸ், யானைப்புல், வைக்கோல், கரும்புச் சக்கை பயன்படுத்தப் படுகின்றன.

வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியின்படி வாழை மட்டை, சோளத்தட்டு, பருத்திமார், சூரிய காந்தித்தட்டு, கம்புத்தட்டு, பார்த்தீனியம் நச்சுக்களை, நீர்த்தாமரை, தேங்காய்மட்டைத்தூள் போன்றவற்றால் வலுவுள்ள காகித அட்டைகள் தயார் செய்யலாம் என்று தெரிய வந்துள்ளது. இந்த மூலப்பொருள்களைக் கழிவுக்காகிதத்துடன் 3:1 என்ற விகிதத்தில் சேர்த்து நல்ல தரமுள்ள அட்டை தயாரிக்க முடியும்.

**மூலப்பொருட்களைத் துண்டுகளாக்குதல்**

காகிதக்கூழ் தயார் செய்வதற்கு, முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப் பொருளான, வாழைத்தண்டு, பருத்திச்செடி, சோளத்தட்டு அல்லது வேறு ஏதாவது அதிக அளவில் கிடைக்கக்கூடிய பயிர்த்தண்டுகளைத் தட்டு வெட்டும் கருவி மூலம் சிறு சிறு துண்டுகளாக வெட்டவேண்டும். துண்டுகள் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு மிகைப்படாமல் இருத்தல் நல்லது. வெட்டப்பட்ட துண்டுகளைக் கழுவி சுத்தம் செய்தபின் கொதிகலனில் போடவேண்டும்.

**கொதிகலனில் வேகவைத்தல்**

சிறு துண்டுகளாகக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொதிகலனில் போட்டபின் அவை நன்கு மூழ்கியிருக்கும் அளவிற்குத் தண்ணீர் ஊற்றவேண்டும். பின்பு எரிசோடா என்கின்ற உப்பை 4 சதம் என்ற கணக்கில் சேர்த்துக்கொண்டு மூலப் பொருளை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் எளிதில் கரையக்கூடிய மாவுப் பொருள்கள் கரைந்தவுடன் நார்ப் பொருட்கள் அப்படியே இருக்கும். 2-லிருந்து 3 மணி நேரம் இவ்வாறு கொதிகலனில் நன்கு வெந்தபிறகு, தண்ணீர் வடிகட்டி வேகவைத்த தண்டுகளைப் பிரித்துவிட வேண்டும்.

**தண்டுகளை அரைத்தல்**

வேகவைத்த தண்டுகளை, பின்பு குளிர்ந்த நீரில் நன்கு கழுவி விட வேண்டும். பின்பு அரைக்கும் எந்திரத்தில் போடவேண்டும். அரைக்கும் எந்திரத்தில் தேவையான அளவு நீர் சேர்த்து 2 மணி நேரத்திற்கு நன்கு அரைக்கவேண்டும். பின்பு அரைத்த மரக்கூழில் 3-இல் ஒரு பங்கு கழிவுக் காகிதம் சேர்த்து, மேலும் 4 மணி நேரம் நன்றாக அரைக்கவேண்டும். பின் அந்தக்கூழில் சீனக்களிமண் 5 சதம், ரோசின் என்ற பசைப் பொருள் ஒரு சதம், ராணிபால், 0.1 சதம், நீலம் 0.05 சதம், ஆலம் 3 சதம் போன்ற இரசாயனப் பொருட்களைக் கலந்து மேலும் 2 மணி நேரத்திற்கு அரைக்க வேண்டும். இந்தக் கூழைப் பிளீச்சிங் தூளைக்கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பிளீச்சிங் தேவையில்லாத காகிதப் பொருட்களுக்கு வெறும் தண்ணீர் விட்டுக் கழுவினால் போதுமானது.

**வார்ப்பிடுதல்**

காகிதம் அல்லது காகித அட்டைகள் தயார் செய்ய ஆட்டோ வாட் என்ற வார்ப்பு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தேவையான அளவு அரைக்கப்பட்ட காகிதக் கூழை எடுத்து வார்ப்பிடும் அச்சில் இடவேண்டும். தயாரிக்கப்போகும் காகித அட்டையின் அல்லது காகிதத்தின் கனத்தைப் பொருத்து, காகிதக் கூழை அளவோடு அச்சில் ஊற்ற வேண்டும். பின் வார்ப்பிடும் அச்சானது தண்ணீரில் மூழ்குமாறு செய்து, காகிதக்கூழானது ஏகத்துக்கும் சீராகப் பரவுமாறு கைகளால் செய்யவேண்டும். பின் அச்சை வெளியில் எடுக்கும்பொழுது, அச்சில் உள்ள சல்லடைத்துவாரத்தின் வழியாகத் தண்ணீர் கசிந்து காகிதக்கூழ் மட்டும் அட்டைவடிவமாகத் தங்கி விடும். பின் ஈரத்தோடு இருக்கும் இந்தக் காகிதக்கூழை மெல்லிய துணிபோல் அப்படியே அச்சை விட்டு எளிதாக எடுத்து, சமமான மரப்பலகையில் கிடத்திடவேண்டும். அடுத்தடுத்து எடுக்கப்படும் ஈரக் காகிதக்கூழ் அட்டையை, துணிகளுடன் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக்கொண்டு வரவேண்டும்.

**நீர்ப்பிழிதல்**

இவ்வாறு வார்க்கப்பட்ட ஈரக் காகித அட்டையைத் திரவ அழுத்தக் கருவியின் உதவியால் அழுத்தும் பொழுது, அந்தப் பொருள்களில் உள்ள அதிகப்படி நீர் பிழிந்தெடுக்கப்படுகிறது. இந்தத் திரவ அழுத்தக் கருவியில் 15-லிருந்து 20 வார்ப்பிட்ட அட்டைகளை ஒரே சமயத்தில் வைத்து நீரைப் பிழியலாம்.

**உலர வைத்தல்**

நீர் பிழியப்பட்ட காகித அட்டைகளைப் போர்த்தப்பட்ட துணிகளோடு அப்படியே வெய்யிலில் உலரவைக்கவேண்டும். இந்த அட்டைகள், காய்ந்த ஒரு அளவுக்கு ஈரம் குறைந்தவுடன் (சுமார் 10 சத ஈரப்பசை) மேலே ஒட்டிய துணி

களைப் பிய்த்து எடுத்துவிட வேண்டும். அதிக அளவு ஈரப்பசை இருக்கும் பொழுது துணியிலிருந்து பிரித்தால் காகித அட்டை கிழிந்துவிட வாய்ப் புள்ளது. ஆகவே, ஈரப்பதத்தில் காகித அட்டையைத் துணியிலிருந்து பிரித்த பின் நன்கு உலரவைத்துக் கொள்ளலாம்.

**சுருக்கம் நீக்கி மெருகிடுதல்**

வெய்யிலில் நன்கு உலர்ந்த காகித அட்டைகளில் நிறைய வளைவுகளும் சுருக்கங்களும் இருக்கும். இவைகளைப் போக்க காகித அட்டைகளை பாலிஷ் செய்யப்பட்ட இரண்டு இரும்புத் தகடுகளுக்கு இடையில் வைத்து, கனமான இரும்பு உருளைகளின் வழியாகச் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் சுருக்கம் நீங்கி அட்டைகள் நன்கு மெருகேற்றப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றன. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை செய்தால் நன்கு மெருகேற்றப்பட்ட அட்டைகள் கிடைக்கும். இந்த அட்டைகளை வெட்டும் கருவி கொண்டு ஓரங்களை வெட்டித் தேவையான அளவிற்குச் செய்து கொள்ளலாம்.

**காகிதப் பொருட்கள், அவற்றின் பயன்கள்**

தேவையான அட்டை கிடைத்தவுடன் அவற்றை மடித்து, இரும்புக் கம்பி பொருத்தி, கோப்புகளாக மாற்றலாம். இந்த அட்டைகளை மெலிதாகக் காகித அளவில் செய்தால் அதிலிருந்து அலுவலகத்திற்கு வேண்டிய தபால் கவர்கள் செய்யலாம். சற்றுச் கனமான தகடுகளைக் கொண்டு, அலுவலகத்தில் அலுவலர்கள் எழுதுவதற்கு உபயோகப் படுத்தும் தாங்கும் அட்டைகளாகச் செய்யலாம். தகுந்த அச்சின் உதவியால் காகித அட்டைகளைச் சாப்பிடும் தட்டாக மாற்றலாம். இவற்றையே முட்டை தாங்கும் ஓடுகளாகக்கூட மாற்றலாம். கனமான காகிதத் தகடுகளுக்கு வார்னிஷ் பூசி பின் வண்ணம் பூசி அலங்காரக் கூரைகளாகவும் தடுப்புச் சுவர்களாகவும் பயன்படுத்தலாம். இந்த ஓடுகளைப் பயன்படுத்தி கனமான அட்டைப் பெட்டிகள் தயார் செய்து பழவகைகள் உணவு டின்கள் போன்றவற்றை அடைத்து அனுப்பலாம்.

ஒரு டன் காகிதப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான தொழிலகத்தின் குறிப்புகள்.

1. தொழில் அமைக்க வேண்டிய கருவிகள், எந்திரங்கள் - ரூ.10,00,000
2. தண்ணீர்/நாள் 25,000 லிட்டர்/நாள்
3. இடவசதி 5,000 ச.அடி.
4. மின்சாரம் 25 எச்.பி.
5. வேலையாட்கள் 25/நாள்
6. வேளாண் கழிவுப்பொருள் 3 டன்/நாள்,
7. கழிவுத்தாள்கள் 1 டன்/நாள்.

காகிதப் பொருட்களின் அடக்க விலை : 1.
காகிதக்கோப்பு ரூ.3.00
தாங்கும் அட்டை 4.50
காகித ஓடு (ச.அடி) ரூ.1.00

## எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய மூன்று இந்தியர்!

இந்திய-திபெத் எல்லைக் காவல்படையைச் சேர்ந்த மூவர் உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறி இந்தியத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டனர்.

15 மலை ஏறும் வீரர்கள் அடங்கிய இந்தியக் குழு எவரெஸ்ட் சிகரத்தை எட்டும் முயற்சியை இம்மாதம் துவக்கியது. இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படையைச் சேர்ந்த இவர்களில் கமாண்டன்ட் சுநீல் தத்தா சர்மா, கம்பெனி கமாண்டர் பிரேம் சிங், சுபேதார் மேஜர் கன்யாலால் ஆகிய மூவரும் உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தைச் சென்றடைந்து சாதனை புரிந்துள்ளனர்.

8,848 மீட்டர் உயரமுள்ள இந்த எவரெஸ்ட் சிகரத்தை இந்தக் குழுவினர் 10.5.1992 அன்று மாலை எட்டினர்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் இந்தியர் இவ்வெற்றியைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது இந்தியப் பெண்

இந்திய-திபெத் காவல்துறையைச் சேர்ந்த சுபேதார் செல்வி சந்தோஷ் யாதவ் 12.5.1992 அன்று வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தார்.

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது பெண் சந்தோஷ் யாதவ் இந்த சாதனையைப் புரிந்த முதல் இந்தியப் பெண் பச்சேந்திரி பால். இவர் 1984-இல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை புரிந்தார்.

# ஒருமைப்பாடு மலர்ந்திட...




உயர்ந்த வானில் வளைந்த மேனி
ஏழு நிறத்து வானவில் குழந்தையை
இயற்கை மழைத்துளி ஈன்றெடுக் கின்றது,
வாழ்வு நுட்பம் வரைந்து காட்டவே!

வாழைநார் மேடையில் நடனம் ஆடிடும்
மெல்லியல் சேர்க்கும் பலநிறப் பூக்கள்
சொல்லிச் செல்லும் உண்மை உணரலாம்!

ஓவியன் நெஞ்சில் அடைகாத்த எண்ணம்
வெள்ளைத் தாளில் சித்திரக் குஞ்சாய்
மேவிப் படியும் பல எழில் வண்ணம்
உள்ளத் துள்ளே போதனை செய்யுமே!

பாடகர் நாவில் ஏழு சுரங்கள்
பிணைந்து எழுப்பும் இசையும், அதனுடன்
மேடையில் பின்னணிக் கருவிகள் ஒருங்கே
இணைந்த முறையும் பாடம் சொல்லுமே!

அரிசிக் கடையிலும் தூய மல்லி,
குறுணை, சம்பா, பொன்னி, நெல்லூர்
வரிசை மூட்டைகள் பலவாய் அமைந்து
தெரிவிக் கின்ற செய்தி இதுதான்.

இந்திய நாட்டில் பற்பல மொழிகள்,
இதயம் ஊட்டிய சாதிகள் இருப்பினும்
சிந்தையில் ஒருமை இருந்தால் மட்டுமே
சிறப்புகள் விரியும்; சீர்களும் பரவுமே!

டாக்டர் மலையமான்

(8 —ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்திட்ட சூழ்நிலையை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. மாநிலங்கள் பெரும் குறைபாடுகளுடன் 8-வது திட்டத்தைத் தொடங்க வேண்டியுள்ளது. சேமிப்புகளுக்கு உண்டான சலுகைகளைச் சமீப காலத்தில் அதிகரித்திருந்தாலும் அவைகள் போதுமானவை அல்ல. வருமான வரி கட்டமைப்புகளைச் சுருக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட நீண்ட காலத் திட்டங்களில் நன்மைகள் உண்டு என்றாலும் இவைகள் மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ள முக்கியமான நிதிப் பற்றாக்குறையினை ஒதுக்கிட முடியாது.

இது மிகப்பெரிய மாறுதலாகையால் ஒரே ஆண்டில் நிறைவேற்றிட முடியாது. சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சிறு சேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும். இதனைச் செய்யாவிடில் வருமான வரி வசூலை அதிகரிப்பதன் மூலம் நிதி நிலைமை மேம்பாடு அடைந்தாலும் எட்டாவது திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநிலங்கள் மிகவும் கஷ்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பத்தாவது நிதிக்குழு விரைவில் அமைக்கப்பட உள்ளது. இந்தக் குழுவின் கடந்த கூட்டத்தில், 9-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சந்திக்கும் இடர்ப்பாடுகளைப் பற்றி கூறியிருந்தேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதனால் ஏற்படும் செலவினங்களையும் நிதிப்பற்றாக்குறைகளையும் கருத்தில் கொள்ளாமல் மாநிலங்களுக்கு வழங்கப்படும் சுங்க வரியின் பங்கைக் குறைத்திருப்பதும் திட்டங்களை நிறைவேற்றுவதில் நடைமுறையில் உள்ள குறைபாடுகளும் சேர்ந்து, செய்யாத தவறுகளுக்குத் தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களுக்குக் கடுமையான நிதி நிலைமையை உருவாக்கியுள்ளது.

**''வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து, புதியதோர் உலகம் படைப்போம் என்னும் நம்பிக்கை பொங்கும், இளமை பொங்கும் நவீன சமுதாயத்தை உருவாக்கப் பீடு நடை போடுவோம்!''**

**''பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம்!''**

வருமான வருவாயில் மிகுந்த பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 8-வது திட்டக் காலத்தைக் குறித்த மட்டில் 10-வது நிதிக்குழு அமைய விருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இக்குழுவின் பரிந்துரைகள் 8-வது திட்டத்தின் இரண்டு ஆண்டுகளில் அமல்படுத்தப்படும். அதிகார மட்டத்தில் ஒரு ஆய்வுக் குழுவின் உதவியுடன் இது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 10-வது நிதிக் குழுவின் வரம்புகளை வரையறுப்பதில் மாநிலங்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகப்படியான நிதி வசதிகளைத் திரட்டுகின்ற முயற்சிகளை மாநிலங்கள் மேற்கொண்டாலும், மிகக் கடினமான நிதிப் பற்றாக்குறை, அதைச் சந்திக்க வேண்டியிருப்பதால் அனுப்புச் சரக்கு வரி (Consignment Tax)யைப் பற்றி விரைவான ஒரு முடிவை எடுப்பது அவசியம் ஏற்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒரு சில விவரங்களே தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

முதலமைச்சர்களுடைய ஒத்துழைப்புடன் இது குறித்து விரைவானதொரு தீர்வினைக் காணலாம் என நான் நம்புகிறேன். இந்த வரியை வசூலிப்பதற்குத் தேவையான மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த வரியை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான முடிவினை நாம் காணலாமெனக் கருதுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மாநிலங்கள் செய்துதர வேண்டியுள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளின் செலவையும் திரும்பப் பெற்றுவிட முடியாது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மாநிலங்களுக்கு எந்தவித வரியும் தருவதில்லை. ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சிறப்பு மத்திய உதவி வழங்க வேண்டுமென்று நான் யோசனை தெரிவித்திருந்தேன். கார்ப்பரேஷன் வரி (Corporation tax)யில் மாநிலங்களுக்கு எந்தப் பங்கும் கிடைப்பது இல்லை. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை

> **''தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ.1 கோடி வழங்கப்படும் ஒரு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது''.**

வசதிகளை வழங்கும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு இருப்பதால், கார்ப்பரேஷன் வரியில் (Corporation tax) ஒரு பகுதியை மாநில அரசுகள் பெற மத்திய அரசு வகை செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது எனக் கருதுகிறேன்.

மாறிவரும் இந்தியப் பொருளாதாரம் கடந்த காலங்களில் பொருளாதாரச் சிக்கல்கள் என்னும் புயல் கடலில் சிக்கி அலைகழிக்கப்பட்ட போது மக்களின் பொறுமை, சகிப்புத்தன்மை, மன வலிமை ஆகியவற்றுடன் வெற்றி கொண்டோம். நாம் சொல்வதெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று ஏற்றுக்கொள்ளமுடியாது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையே மக்கள் சிறந்த குணாதிசயங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள முடியாது. தேவைகளுக்காகவும், வறுமையைப் போக்கவும் தியாகங்கள் புரிய வேண்டும் என கேட்காத கொள்கை நெறிமுறைகளை நாம் வகுத்தாக வேண்டும். 8-வது திட்டத்தைத் துவக்குகின்ற இவ்வேளையில் கோடிக்கணக்கான இந்தியர்களுக்குச் சிறப்பான வாழ்க்கையை வழங்குகின்ற நற்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம். வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, , பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து, புதியதோர் உலகம் படைப்போம் என்னும் நம்பிக்கை பொங்கும், இளமைப்பொங்கும் நவீன சமுதாயத்தை உருவாக்க பீடு நடை போடுவோம்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் தன்னுடைய தொடக்க உரையில், சில மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களில் அரசியல் வேறுபாடு காட்டப்படுகிறது என்று கவலைப்பட்டார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளர்ச்சித் திட்டங்களில் அரசியல் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்று பிரதமர் அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன். இந்தத் தருணத்தில் தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ.1 கோடி வழங்கப்படும் ஒரு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்படுகிறது என்பதை, பிரதமர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 386 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் அரசியல் பாகுபாடு இல்லாமல் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பது இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுடில்லியில் 22.5.92 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

## அஞ்சல்



• அஞ்சல் சேவை நாட்டுக்குத் தேவை. மார்ச் 31-ந் தேதி நிலவரப்படி நாட்டில் 1,48,719 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இதில், 1,32,646 அஞ்சல் அலுவலகங்கள் கிராமங்களிலும், 16,073 அஞ்சல் அலுவலகங்கள் நகரங்களிலும் அமைந்துள்ளன.

1990-92-இல் 1,476 அஞ்சல் அலுவலகங்களைக் கிராமப்புறங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. நாட்டில் மொத்தம் 5,20,074 அஞ்சல் பெட்டிகள் உள்ளன. இதில் 4,36,667 கிராமங்களிலும், 83,407 நகரங்களிலும் அமைந்துள்ளன. 22.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கும், 4,607 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கும் சராசரியாக ஒரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ளது.

1990-92-இல் அஞ்சல் துறையின் வருவாய் ரூ.840.85 கோடி, செலவு ரூ.1,032.50 கோடி, பற்றாக்குறை ரூ.191.65 கோடி.

## திராட்சை



• நம் நாட்டில் 25,000 எக்டேர் நிலப்பரப்பிலிருந்து 5,35,000 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதிகமாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் பயிரிடப்படும் 9,000 எக்டேர் நிலப்பரப்பில் 1,60,000 டன் திராட்சை விளைகிறது.

உலகிலேயே அதிகபட்சமாக நெதர்லாந்தில்தான் ஒரு எக்டேருக்கு 28.5 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தப்படியாக இந்தியாவில் 21.7 டன் திராட்சை உற்பத்தியாகிறது. திராட்சை சாகுபடி மூலம் 4.5 இலட்சம் பேருக்கு நிரந்தரமாகவும், 9-10 இலட்சம் பேருக்குத் தற்காலிகமாகவும் வேலை கிடைக்கிறது.

ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து எட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள 4,000 டன் திராட்சை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

# ஆசியஜோதி



'ஆசிய ஜோதி' என்கிற அகிலப் புகழ்பெற்ற ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவு நாளையொட்டி (27.5.92) இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

"இந்தியாவையும் இந்திய மக்களையும் மிகுந்த பாசத்தோடு நேசித்த நல்ல மனிதர் இவர்; பதிலுக்கு இந்திய மக்களும் இவரிடம் மிக அன்பு காட்டி அளவற்ற ஆதரவளித்து வந்தார்கள் என்று மற்றவர்கள் என்னைப் பற்றிப் பேசுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்"— என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவர், எழுதிக் கொண்டிருந்தவர் 'ஆசிய ஜோதி'யான ஜவகர்லால் நேரு அவர்கள் (14.11.1899-27.5.1964).

அமெரிக்க நாட்டிற்குச் சென்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களிடம்— "நேருவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது.

"அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்; நான் கொட்டிக்கிடக்கும் செங்கல்"— என்று பெருந்தன்மையோடு அதற்குப் பதில் கூறிப் பெருமை கொண்டார் அமரர் அண்ணா.

இத்தனைப் பெருமையுடைய நேரு பெருமகனாரின் வாழ்வு அவர் இந்தியப் பிரதமராகப் பதவி பெற்றதால் மட்டுமல்ல; செயற்கரிய செய்த செம்மல் அவர் என்பதாலுமே நீங்கா நினைவுக்கு உரியதாயிற்று.

நேருவினுடைய ஒவ்வொரு நாள் பணிகளும் அதிகாலையிலேயே- குறிப்பாகச் சொல்லுவதானால் பறவைகள் சிறகு விரிக்கும் அதிகாலைப் பொழுதிலேயே துவங்கிவிடும்.

அன்றைய பொழுதிற்குள் தன்னை எதிர் நோக்கியுள்ள பணிகள் யாவை— முடிக்க வேண்டிய வேலைகள் என்னென்ன— தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள் எவையெவை என்றெல்லாம் முடிவெடுப்பதே அவரது முதல் பணியாக இருக்கும்.

பிறகுதான்- மகள் இந்திரா காந்தியோடும், தமது பேரப்பிள்ளைகளான ராஜீவ், சஞ்சய் ஆகியோருடனும், காலை உணவருந்துவார். நண்பர்களும் முக்கிய விருந்தினர்களும் கூட அந்தக் காலை நேரச் சிற்றுண்டியில் கலந்து கொள்ளுவதுண்டு. மீண்டும் அவர்கள் சந்திப்பு மறுநாள் காலை உணவின் போதுதான் இருக்கும்.

அவருக்கு அந்தக் காலைச் சாப்பாடே பெரும்பாலும் முக்கியச் சாப்பாடாக அமைந்து விடும். சாப்பிடும்போதே அலுவலகப் பணி பற்றிய விசாரணைகளும் உத்தரவுகளும் அவரிடமிருந்து பிறக்கும்.

பின்னர், வெளியே உள்ள புல்வெளியில் தம்மைக் காணக் காத்திருக்கும் பார்வையாளர்களைச் சந்திக்க வந்துவிடுவார். கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வந்திருக்கும் மக்களின் துன்ப துயரங்கள் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் மிகவும் பொறுமையோடு செவி கொடுத்துக் கேட்பார். கொடுக்கும் மனுக்களைப் பெற்றுக் கொண்டு பதில் தரும்படிக் குறிப்பெழுதுவார். உரிய அதிகாரியிடம் சேர்ப்பார். அவரைப் பார்த்து மகிழவே பல பேர் வந்து போவார்கள்.

யாராயிருந்தாலும் சரி; 'முகஸ்துதி' பண்ணும்படியாகவோ, திருப்திப்படுத்தினால் போதும் என்ற வகையிலோ அவர் பேசியதே இல்லை; நினைப்பதை வெளிப்படையாகச் சொல்லுவார்.

"மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன கருதுகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆம்; அவர்களுடைய மனதை நான் அவசியம் புரிந்துகொண்டாக வேண்டும். ஏனெனில் நான் அவர்களை இவ்வளவு ஆண்டுகளாக நேசித்து வருகிறேன்" என்று 1963-இல் அவர் ஒரு முறை தெரிவித்தார்.

அந்த வகையிலேயே அன்னாரின் பொதுமக்கள் சந்திப்பு அமையும். அதன் பிறகு அலுவலகத்திற்குச் செல்வார். அரசு அலுவல்களில் முழுக் கவனமும் செலுத்துவார்.

அவருடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் புரிந்துகொண்டிருக்கும் செயலாளர்களும் தட்டெழுத்தாளர்களும் அவருடன் இரவு நீண்ட நேரம்வரையில் சளைக்காமல், களைக்காமல் வேலை பார்ப்பார்கள்.

நாளொன்றுக்கு அவர் ஐந்து மணி நேரம் தூங்கினாலே பெரிய காரியம்! வேலை நாட்களில் மட்டுமல்ல; இந்த வேலை முறைகள் விடுமுறை நாட்களில் கூட விருவிருப்போடு தொடரும். அந்த அளவுக்கு அசாதாரணமான மன உறுதி பெற்றிருந்தார் அவர். செயல்படுவதில் உற்சாகத்தையும், முடிவெடுப்பதில் துணிவையும், பல தரப்பட்ட மக்களையும் பல்வேறு இடங்களையும் நேரில் கண்டறிகின்ற ஆர்வத்தையும் அவர் ஒரு போதும் இழந்ததில்லை, மனச்சோர்வுற்றுத் தளர்ந்ததில்லை.

குறித்த நேரத்தில் எதையும் செய்ய வேண்டும் என்பார் அவர்;

மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். மனிதர்களிடம் மட்டுமல்ல; விலங்குகளிடமும் அவர் அன்பு காட்டினார். அதிசய இமாலய பண்டாக்களுக்கும், தமது வளர்ப்பு மிருகங்களான புலிக்குட்டிகளுக்கும் தாமே நேரில் போய்த் தீனிபோடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

நேரமிருக்கும்போது வீட்டுத் தோட்டத்தில் உலவுவதே அவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

''வறுமையை ஒழிக்கவும், சர்வ தேச உறவுகளை வளர்க்கவும், இந்த உலகில் சமாதானத்தை நிலை நிறுத்தவும் எனக்கு இன்னும் அதிக அவகாசம் தேவை'' என்று அவர் ஒரு முறை பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார்.

1964-ஆம் ஆண்டு மே மாதம் 22-ந் தேதி நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், நிருபர் ஒருவர் நேருவிடம் கேட்டார்—

''உங்களுக்குப் பிறகு யார்?''

''என் ஆயுள் அவ்வளவு சீக்கிரம் முடியப் போவதில்லை!''— என்றார் நேரு.

அந்த அளவிற்கு மன உறுதி மிக்கவராகவும், ஊக்கம் மிக்கவராகவும் இளமை முறுக்கோடு செயல்பட்டு வந்த நேரு பெருமகனார், சீனப் படையெடுப்புக்குப் பிறகுதான் தமக்கு வயதாகி விட்டதை உணர்ந்து கொண்டவரைப் போலத் தளர்வுடன் காணப்பட்டார். மனச் சோர்வுற்றார்.

குறிப்பாக- மே மாதத்தில் அவருக்கான பணிகள் ஏராளம் இருந்தன.

முதல் ஒன்பது நாட்கள் நாடாளுமன்றக் கூட்டம் இருந்தது.

காஷ்மீரப் பிரச்னையைத் தீர்ப்பது குறித்தும், பாகிஸ்தானுடன் நல்லுறவை வலுப்படுத்துவது பற்றியும் டில்லிக்கு வந்திருந்த ஷேக் முகமது அப்துல்லாவுடன் தீவிரமாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருந்தது.

அதன்பின் நேபாளம் சென்று, அங்கு நடந்த பெரியதோர் பாசனத் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார்.

மே மாதம் 10-ஆம் தேதி நடைபெற்ற திட்டக் கமிஷன் கூட்டத்தில் பங்கேற்றார். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதித்து வரையறுத்தார். 14-ந் தேதி பம்பாய் சென்று காஷ்மீர்ச் சிக்கல், அயல் நாட்டுறவு பற்றிய இரண்டு கூட்டங்களில் கலந்து கொண்டு அரியதோர் உரையாற்றினார்.

22-ஆம் தேதி நடந்த பத்திரிகையாளர் கூட்டம் பற்றித்தான் மேலே பார்த்தோம். சீனா, பாகிஸ்தான், லாவோஸ், விலைவாசி, லண்டன் பயண உத்தேசம் ஆகியவை பற்றிய பல கேள்விகளுக்கும் அவர் அதில் பதில் அளித்தார்.

23-ஆம் தேதி காலையில், இரண்டு நாள் ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்காக டேராடூனுக்கு விமானத்தில் சென்றார். அங்கு போயும் அவர் சும்மாயிருக்கவில்லை; முக்கியக் கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திட்டார். சில புத்தகங்களைப் படித்தார். ஒரு புத்தகத்திற்கு முன்னுரை எழுதி முடித்தார்.

> எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.
>
> - பேரறிஞர் அண்ணா.

நீண்ட கால நண்பரும் சகாவுமான ஸ்ரீ பிரகாசாவை அங்கே சந்தித்துப் பேசினார், நேரு. அவரது தளர்வை உணர்ந்த ஸ்ரீ பிரகாசா, வயதேறி வருவதைச் சுட்டிக் காட்டி, ''வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்'' என்றார். அதைக் கேட்ட நேரு, கிண்டலாகச் சிரித்துக் கொண்டார். அவரைப் பெருமூச்சோடு பார்த்தார்.

மே மாதம் 26-ஆம் தேதியன்று டில்லி திரும்பிய அவர், இரவு சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்து விட்டுப் படுத்தார். மறுநாள் அதிகாலை 6.20 மணிக்கு எதிர்பாராமல் அவரது உடல் நலம் கெட்டதை அறிந்த மகள் இந்திரா, பதறிப் போய் டாக்டர்களைக் கூப்பிட்டனுப்பினார். அடுத்த சிறிது நேரத்திலேயே அவர் நினைவிழந்து விட்டார்.

மத்திய அரசின் முக்கிய அமைச்சர்களுக்கெல்லாம் செய்தி தெரிவிக்கப்பட்டது. பம்பாயில் இருந்த அவருடைய சகோதரிகள் திருமதி விஜய லட்சுமி பண்டிட், திருமதி கிருஷ்ணா ஹத்தீசிங் ஆகியவர்களும் உடனடியாக வரவழைக்கப்பட்டார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் திடீர் உடல் நலக் குறைவு பற்றிய செய்தி, நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் தெரிவிக்கப்பட்டது. அடுத்த சிறிது நேரத்திலேயே இந்தியாவெங்கும் இச் செய்தி பரவி விட்டது.

ஆற்றலும், அனுபவமும் மிக்க டாக்டர்களெல்லாம் ஒன்று கூடி, அவருக்குற்ற நோயின் வேகத்தைத் தணிக்க- அல்லது நீக்க தம்மால் முடிந்தவரை போராடினர். தான் பிறந்த இந்திய மண்ணுக்கு இணையற்ற பணிபுரிந்த- முழு அன்போடு இந்த நாட்டை நேசித்து, நாட்டு மக்கள் அனைவரின் நல்லன்பையும் பெற்றுக் கொண்ட - மகாத்மா காந்தியடிகளே அடிக்கடி தன்னுடைய வாரிசு என்று பெருமையோடு குறிப்பிட்டுவந்த - சுதந்திர, ஜனநாயக, மதச்சார்பற்ற, சமாதான இந்தியாவை அவரோடு இணைந்து நின்று தியாகம் பல புரிந்து உருவாக்கிய - உண்மை, ஒழுக்கம், வீரம், விவேகம், உயரிய இலட்சியம் ஆகியவற்றோடு சுமார் அரை நூற்றாண்டுக் காலம் இந்திய நாட்டுக்கும் உலகுக்குமாக அரும்பணி பல புரிந்த மனிதருள் மாணிக்கமாம் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இயற்கை எய்தி விட்டார்.

இந்திய நாட்டிற்குச் சைமன் குழு வருவதை எதிர்த்த போதும் (1928), உலகப் புகழ் பெற்ற தண்டி யாத்திரையின் போதும் (1930), ஆங்கிலப் போலீஸார் வெகுண்டெழுந்து ஜவஹரைத் தடி கொண்டு தாக்கியதுண்டு- அப்போதெல்லாம் அடிபட்ட வேங்கை போல் வெகுண்டெழுந்து அந்தத் தடியைத் தாவிப் பிடுங்கி வீசி

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு, மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஸ்ரீபெரும்புதூரில் முதலாண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள் (21.5.92).

**நான்காம் அட்டை:**

உதகை, மலை வாழ் மக்களின் நடனத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார் (17.5.92).

யெறிந்த அந்த மாவீரனின் உடல் சாய்ந்துவிட்டது.

"சுதந்திரப் போர் வீரர், நவீன இந்தியாவின் சிருஷ்டி கர்த்தா, மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் மறைந்து விட்டார்; இந்திய சரித்திரத்தின் ஒரு சகாப்தம் முடிந்து போய் விட்டது"- என்று இந்தியக் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் கலக்கத்தோடும் கண்ணீரோடும் தெரிவித்தார்.

நேரு இல்லை என்பதையறிந்த இந்திய நாடு நிலவில்லாத வானம் போல் இருண்டு போயிற்று. ஒவ்வொரு நாட்டு வானொலியும் இந்தத் துக்கச் செய்தியை உலகம் முழுமைக்கும் தெரிவித்தது. உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது. துயரக் கடலில் மூழ்கியது.

இந்தியாவின் தேசியக் கொடி மட்டுமல்ல; இந்தியாவிலிருந்த அத்தனைக் கட்சிகளின் கொடிகள் மட்டும் கூட அல்ல; ஐக்கிய நாடுகள் சபையின் கொடியும் அரைக் கம்பத்திலே பறக்க விடப்பட்டது.

இந்தியாவில் பன்னிரண்டு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தீன்மூர்த்தி மார்க்கில் இருந்த நேருவின் இல்லத்திற்குத் தங்கள் இணையற்ற தலைவரின் முகத்தைக் கடைசியாகத் தரிசிக்க மக்கள் வெள்ளம் கரை புரண்டது. இலட்சோப இலட்சம் மக்களின் விழிகள் மட்டுமல்ல; வானமும் அன்று அழுதது— ஆம், அன்று மழை!

தற்காலிகப் பிரதம மந்திரியாகக் குல்சாரிலால் நந்தா பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மறுநாள் வியாழக் கிழமை நண்பகல் ஒரு மணிக்குத் தலைவர் ஜவகரின் உடல் பீரங்கி வண்டியிலேற்றி, காந்தி உடல் தகனம் செய்யப்பட்ட ராஜ் கட்டத்திலிருந்து, முந்நூறு கஜ தூரத்திலிருந்த 'சாந்தி வனத்'திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆயுதப் படையைச் சேர்ந்த அறுபது வீரர்கள் அந்த வண்டியை இழுத்துச் சென்றனர், இதயம் நொந்தவாறே!

அதையடுத்து— திருமதி இந்திரா காந்தி, அவரது இளைய புதல்வர் சஞ்சய், குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன், நேரு பெருமகனாரின் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள், அயல் நாட்டுப் பிரதிநிதிகள்— ஆகியோர் வரிசையாகக் காரில்.

ஆறு மைல் தூரம்- வழி நெடுகிலும் வெள்ளம் போல் மக்கள் கூட்டம். அத்தனை முகத்திலும் அன்புத் தலைவனைப் பிரிந்த வாட்டம்!

பத்து ஏக்கர் பரப்பளவுள்ள சாந்தி வனத்தில், மேடை மீது அடுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகளின் மேலே சந்தன வண்ண மேனிப் பண்டித நேருவின் சடலம் பக்குவமாகக் கிடத்தப்பட்டது. "பண்டிட் நேரு அமர் ஹோ!" (பண்டித நேரு அமரராகட்டும்) என்ற முழக்கம் மண்ணதிர எழுந்தது.

தலைவர் ஜவாஹரின் உடலிருந்த சிதைக்கு இளைய பேரப் பிள்ளையான சஞ்சய் தீ மூட்டினார்.

அதற்கு மறுநாள், ராம் லீலா மைதானத்தில் மாபெரும் இரங்கல் கூட்டம் நடந்தது. பல்வேறு இந்திய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதில் பங்கேற்று, மறைந்து போன மனிதருள் மாணிக்கத்திற்கு- ஆசிய ஜோதிக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

மே மாதம் 29-ந் தேதியன்று பார்லிமெண்ட் கூடியது. "பண்டித நேரு தம் ஆயுள் முழுதும் எவைகளுக்காகவெல்லாம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாரோ, அந்த இலட்சியங்களாகிய உலக சமாதானம், உலக முன்னேற்றம், தேச ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, தேசிய சுபிட்சம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்" என்று அக்கூட்டத்தில் உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மே மாதம் 30-ந் தேதியன்று சஞ்சய்யும், அவரது சகோதரர் ராஜீவும் அஸ்திகளைச் சேகரித்தார்கள். ஜவாஹர்லால் நேரு பிறந்த இடமான அலகாபாத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியவை கலக்கும் திரிவேணி சங்கமத்தில்- தலைவர் ஜவாஹர் தமது உயிலில் எழுதி வைத்திருந்தபடி-ஜூன் மாதம் 8-ந்தேதி சிறிதளவு அஸ்தி கரைக்கப்பட்டது. மீதி அஸ்திச் சாம்பல் அளவோடு பல்வேறு மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு பல நதிகளில் கரைக்கப்பட்டது. ஜூன் மாதம் 12,13 தேதிகளில், பாக்கி அஸ்தி விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு வானிலிருந்து வயல் வெளிகளிலே தூவப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், பண்டித ஜவாஹர்லால் நேரு தம்முடைய உயிலில் என்ன எழுதி வைத்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளுவது நல்லது.

1954-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் தேதியன்று, தலைவர் ஜவஹர் எழுதியிருந்த உயில் சாசனத்தின் சில முக்கியப் பகுதிகள் வருமாறு:

இந்திய மக்களின் அபரிமிதமான அன்பையும் பிரியத்தையும் நான் பெற்றிருக்கிறேன். நான் என்னதான் பணியாற்றினாலும் இதில் ஒரு சொற்பப் பகுதியைக் கூட என்னால் திருப்பிக் கொடுக்க முடியாது; சொல்லப் போனால் அன்பெனும் அரிய பொருளுக்குக் கைம்மாறே இருக்க முடியாது. பலர் வியந்து போற்றப்பட்டுள்ளனர்; சிலர் தொழுது வணங்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்திய மக்களில் சகல பிரிவினரும் என்மீது அளவற்ற அன்பைக் காட்டி வருகின்றனர். அதில்

நான் திக்குமுக்காடிப் போனவன். என் வாழ்வில் எஞ்சியிருக்கக் கூடிய ஆண்டுகளில் என் மக்களுக்கும் அவர்களுடைய அன்புக்கும் நான் அருகதையற்றவனாகி விடக்கூடாது என்ற விருப்பத்தை மாத்திரமே நான் தெரிவிக்க முடியும்.

எண்ணற்ற எனது தோழர்களுக்கும் சகாக்களுக்கும் இதைவிடவும் அதிகமாக நான் கடன்பட்டிருக்கிறேன். மாபெரும் முயற்சிகளில் நாங்கள் கூட்டாளிகளாக இருந்திருக்கிறோம்; அவைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளாகிய வெற்றிகளையும் துயரங்களையும் பகிர்ந்துகொண்டிருக்கிறோம்.

என்னுடைய மரணத்திற்குப் பின், எனக்காக மதச் சடங்குகள் எதையும் நடத்த வேண்டாம் என்பதை முழு அந்தரங்கச் சுத்தியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய சடங்குகளில் எனக்கு நம்பிக்கையில்லை; வெறும் ஐதீகத்திற்காகக் கூட இவற்றிற்கு உட்படுவது மோசமானதாகவும், நம்மையும் பிறரையும் ஏமாற்றுவதற்கான முயற்சியாகவுமே இருக்கும்.

நான் இறந்தபின் என்னுடைய உடலைத் தகனம் செய்து விட வேண்டும் என்று விரும்புகிறேன். அயல் நாட்டிலே நான் இறந்தால் என்னுடைய உடலை அங்கே தகனம் செய்து அஸ்தியை அலகாபாத்துக்கு அனுப்ப வேண்டும். இந்த அஸ்தியில் ஒரு சிறு கைப்பிடியளவு எடுத்து கங்கையில் போட வேண்டும்; அதில் பெரும் பகுதியைக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில் காலி செய்ய வேண்டும்; இந்த அஸ்தியில் சிறிதளவையும் மீதம் வைக்கவோ, சேமித்து வைக்கவோ கூடாது.

என்னுடைய அஸ்தியில் ஒரு கைப்பிடியளவை அலகாபாத் வழியாகச் செல்லுகின்ற கங்கையில் போட வேண்டும் என்று நான் விரும்புவதற்கு என்னைப் பொருத்த வரை மதரீதியான முக்கியத்துவம் எதுவும் இல்லை. இவ்விஷயத்தில் மத உணர்வு எதுவும் எனக்குக் கிடையாது. அலகாபாத் வழியாகச் செல்லும் கங்கை, யமுனை நதிகளுடன் குழந்தைப் பருவம் முதலே எனக்குப் பாசம் இருந்து வருகிறது; வயது ஆகஆக இந்தப் பாசமும் வளர்ந்து வந்திருக்கிறது. பருவகாலங்கள் மாறும் போது அவற்றின் பல்வேறு

> இயற்கை அழகு என்பது, ஆண்டவனின் புன்சிரிப்பு, இசை என்பது, அவனுடைய குரல்.
>
> — ஜான்சன்.

தோற்றங்களைக் கவனித்திருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக அவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றில் ஓடும் தண்ணீரின் சரித்திரம், புராணம், வளமுறை, பாடல், கதை ஆகியவைபற்றி நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

குறிப்பாக, கங்கை இந்தியாவுக்கே உரிய நதி; இந்நாட்டு மக்களின் அன்புக்குரியது. இந்நாட்டின் இன நினைவுகள், நம்பிக்கைகள், அச்சங்கள், வெற்றிப் பாடல்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவை அதனுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எப்போதும் மாறிக் கொண்டிருக்கும்; எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். அதே சமயத்தில், எப்போதும் கங்கையாகவே இருந்து வரும் அது, இந்தியாவின் புராதனப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் சின்னமாக விளங்குகிறது.

நான் பெரிதும் நேசித்த இமய மலையின் பனி மூடிய சிகரங்களையும், ஆழமான பள்ளத்தாக்குகளையும் அவற்றுக்குக் கீழே உள்ளவையும் எனது வாழ்க்கை, பணி ஆகியவற்றின் நிலைக் கலனுமான வளமான, விரிவான சமவெளிகளையும் கங்கை எனக்கு நினைவூட்டுகிறது. காலைக் கதிரவனின் ஒளியில் முறுவலித்து நர்த்தனமாடிக் கொண்டும்; அந்தி மயக்கத்தில் இருளும் மருளும் மர்மமும் நிறைந்ததாயும்; குளிர்காலத்தில் ஒடுக்கமான ஓடையாக மெதுவாகச் செல்லுவதும், ஏறத்தாழக் கடல் போன்ற பரப்பையும் சமுத்திரத்தின் பயங்கரத்தை ஓரளவு கொண்டதுமான கங்கையைக் கடந்த கால இந்தியாவின் சின்னமாகவும் நினைவாகவும் நான் கருதி வந்திருக்கிறேன். அந்தக் கடந்த காலம் நிகழ்காலத்திலும் பாய்ந்து வருங்காலம் என்கிற மகாசமுத்திரத்தை நோக்கி ஓடுகிறது.

கடந்தகால வளமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் பெரும் பகுதியை நான் கைவிட்டு விட்ட போதிலும் இந்தியாவைக் கட்டிப் பிணைத்து வில்லங்கப்படுத்தி, அதன் மக்களைப் பிரித்து வைத்து அவர்களுள் ஏராளமானோரை ஒடுக்கி வைத்து, உடம்பு- ஆன்மா ஆகியவற்றின் சுயேச்சையான வளர்ச்சியைத் தடுக்கின்ற விலங்குகளை இந்தியா உதறி எறிய வேண்டும் என்று நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும், இவைகளையெல்லாம் நான் விரும்பிய போதிலும், அந்த கடந்த காலத்துடன் உள்ள தொடர்பை அடியோடு துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

நம் உடைமையாக இருந்து வருகின்ற, இருந்து வந்திருக்கின்ற அந்த மகத்தான பிதுரார்ஜிதம் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். நினைவறியாத இந்தியாவின் கடந்த காலம் முதல், சரித்திர உதய காலம் முதல், தொடர்பு அறாமல் இருந்து வரும் சங்கிலியிலே நம்மனைவரையும் போல நானும் ஒரு கண்ணி என்பதை உணர்கிறேன். அந்தச் சங்கிலியினை நான் துணிக்க மாட்டேன்; ஏனெனில் அதைக் கருவூலமாகப் போற்றுகிறேன். அதிலிருந்து ஆதர்சம் பெறுகிறேன். என்னுடைய இந்த ஆசையின் சாட்சியாகவும், இந்தியாவின் கலாச்சாரப் பிதுரார்ஜிதத்துக்குச் சமர்ப்பிக்கும் கடைசி அஞ்சலியாகவும், என்னுடைய அஸ்தியில் ஒரு கைப் பிடி அளவை அலகாபாத்தில் ஓடும் கங்கையில் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; இந்தியாவின் கறையைக் கழுவிக் கொண்டிருக்கும் மகா சமுத்திரத்துக்கு அது அங்கிருந்து செல்லும்.

என் அஸ்தியில் பெரும் பகுதியை வேறு விதமாகக் காலி செய்ய வேண்டும்; அதை ஒரு விமானத்தில் வைத்து ஆகாயத்தில் வெகு உயரே எடுத்துச் சென்று, இந்தியாவின் குடியானவர்கள் பாடுபட்டு உழைக்கும் வயல்கள்மீது அந்த உயரத்திலிருந்து தூவ வேண்டும் என்று விரும்புகிறேன்; இதன் மூலம் அது (அஸ்தி) இந்தியாவின் மண்ணுடனும் புழுதியுடனும் ஒன்று கலந்து, வேறுபடுத்த முடியாதபடி இந்தியாவின் பாகமாகிவிடும்.

—இவ்வாறு அந்த உயிலிலே குறிப்பிட்டு எழுதியிருந்தார் ஜவஹர்.

— இல. இராசேந்திரன்

## ரயில்

○ ரயில்வேயில் மின்சாரம் கிடைக்காத இடங்களில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி சிக்னல்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெயை சிக்னல்களில் பயன்படுத்துவதால் தொழில்நுட்பப் பிரச்சினைகள் வருவதால், மண்ணெண்ணெய்க்குப் பதிலாக சூரிய சக்தி பயன்படுத்தப்படுகிறது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தியதால் 1991-இல் 19,050 கிலோ வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டது. இது 90,200 லிட்டர் மண்ணெண்ணெய்க்குச் சமம். சூரிய சக்தி மூலம் நீரைச் சூடுபடுத்தவும், நீரைத் தூய்மைப்படுத்தவும், சிக்னல்களுக்குப் பேட்டரி மூலம் சக்தியை அளிப்பதற்கும் தொழில்நுட்பப் பொருளாதார அடிப்படையில் ரயில் நிலையங்களை மின்மயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

○ ரயில் பெட்டிகள் தயாரிப்பதில் பெரம்பூர் ரயில் பெட்டித்தொழிற்சாலை 1992 ஏப்ரல் மாத இலக்கினை விஞ்சியுள்ளன. இந்த மாதத்தில், பெரம்பூர் ரயில்பெட்டித்தொழிற்சாலை 91 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 72 தான். கபூர்தலா ரயில்பெட்டித் தொழிற்சாலை 90 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இலக்கோ 83 தான். வாரணாசி ரயில் எஞ்சின் தொழிற்சாலை, பத்து டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்துள்ளது. பெங்களூரில் உள்ள சக்கரம் மற்றும் அச்சுத் தொழிற்சாலை, 5,043சக்கரங்களைத் தயாரித்துள்ளது. 6,855 சக்கரங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

## திரைப்படம்

இந்தியாவின் முதல் திரைப்படம், 'ராஜா ஹரீஷ் சந்திரா' வெளிவந்து 80 ஆண்டுகளாகிவிட்டன. 1920-களிலேயே நமது திரைப்படத்துறை, உலகில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

1920-இல் பேசும் திரைப்படம் வந்தபின்னர் திரைப்படங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. சென்ற பத்தாண்டுகளாக உலகிலேயே அதிகத் திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது.

1991-இல் பதினெட்டு மொழிகளில் 910 படங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொருநாளும், நாட்டில் உள்ள ஏறத்தாழ 13,000 திரையரங்குகளில் ஒன்றரைக் கோடி மக்கள் திரைப்படங்களை ரசிக்கிறார்கள். கேபிள் டி.வி., வீடியோ கேசட்டுகள் ஆகியவற்றுடன், தொலைக்காட்சியும் வாரத்தில் ஆறேழு திரைப்படங்களைக் காண்பிக்கிறது.

## தொலைபேசி

1990-91-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 50.75 இலட்சம் தொலைபேசி இணைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. எனினும் தொலைபேசி இணைப்புக் கோரி மேலும் 19.61 இலட்சம் விண்ணப்பங்கள் காத்துக்கிடக்கின்றன.

நாட்டிலுள்ள 216 மாநகரங்களுக்கும், 3,029 நகரங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 5,75,495 கிராமங்களில், 26,952 கிராமங்களில் டிரங்கால் செய்யக்கூடிய பொதுத் தொலைபேசி வசதி உள்ளது. 15,091 தொலைபேசி இணைப்பகங்கள் நாட்டில் செயல்படுகின்றன.

பொதுமக்கள் வசதி கருதி, 1990-91-ஆம் ஆண்டில் மட்டுமே 11,236 உள்ளூர்ப் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 1,217 வெளியூர் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 192 எஸ்.டி.டி. பொதுத் தொலைபேசி இணைப்புகளும் நாடு முழுவதும் நிறுவப்பட்டு உள்ளன.



## சுற்றுலா



கடந்த ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து 17,79,849 சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்துள்ளனர். இதன் மூலம் ரூ.3,317 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் இந்தியா வந்துள்ளனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



## கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

